தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
(கல்வி அமைச்சு)

நிருவாக அறிக்கை
2020

பொருளடக்கம்

தலைவரின் செய்தி	85
பணிப்பாளர் நாயகத்தின் செய்தி	85
தொலை நோக்கு / பணிக்கூற்று / நோக்கமும் இலட்சியமும்	87
நிறுவனத்தின் குறிக்கோள்	87
நிறுவனத்தின் நோக்கம்	88
அலுவலக ஊழியர் விபரம்	90
அலுவலக ஊழியர் பயிற்சி	93
நூலீட்டற் பிரிவு	94
வாசகர் சேவைப் பிரிவு	98
தகவல் தொழில்நுட்பப் பிரிவு	101
நூற்பட்டியற் கட்டுப்பாட்டுப் பிரிவு	103
பேணல் மற்றும் புதுப்பித்தமைத்தற் பிரிவு	105
நூலக ஆய்வுப் பிரிவு	109
எண்மய நூலக ஒன்றியம்	111
விரிவாக்கற் சேவைப் பிரிவு	112
கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு	117
வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு	120
நூலக கூட்டுறவுப் பிரிவு	127
தந்திரோபாய திட்டமிடற் பிரிவு	131
நிருவாகப் பிரிவு	132
பராமரிப்புப் பிரிவு	133
நிதிப்பிரிவு	134
உள்ளகக் கணக்காய்வு	136
நிதி அறிக்கை 2020	137
கணக்காய்வு பணிப்பாளர் அறிக்கை 2020	157

தலைவரின் செய்தி

2020 ஆம் ஆண்டில் இலங்கை தேசிய நூலகத்தின் சகல பிரிவுகளினாலும் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அரச திறைசேரியில் இருந்து வருடாந்தம் கிடைக்கும் நிதி ஒதுக்கீடு மற்றும் வேறு வழிகளில் கிடைக்கும் வரு–மானங்களைக் கொண்டு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் நோக்கத்தையும் குறிக்கோளையும் நிறைவேற்றுவதற்கு அச்செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிய கௌரவ கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இச்செயற்பாடுகளை நன்கு நிறைவேற்றியமைக்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பணிப்பாளர் நாயகத்திற்கும், சிரேஷ்ட அலுவலர்கள் குழுவைச் சார்ந்த சகல அலுவலர்களுக்கும், இதை தொகுத்து வழங்கிய மூலோபாயத் திட்டமிடல் பிரிவின் பிரிவுத் தலைவர் உட்பட சகல ஊழியர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.



பேராசிரியர் நந்த தர்மரத்ன
தலைவர்

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை கல்வி அமைச்சின் கீழ் இயங்குகின்ற சட்டப்பூர்வமான அமைப்பாகும். தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பிரதான நோக்கமானது தேசிய நூலகத்தை வழிநடத்தி செல்வதுடன் இலங்கையில் உள்ள பிற நூலகங்களை அபிவிருத்திச் செய்தல். இவ்வருடத்தில் உலகம் முழுவதும் வேகமாக பரவிவந்த COVID – 19 தொற்றுத் தாக்கம் இந்த நாட்டையும் தாக்கியுள்ளது. சபையின் செயற்பாடுகளை திட்டமிடப்பட்டபடி நடைமுறைப்படுத்திச் செல்லும் போது பாரிய அளவு தாக்கம் ஏற்பட்டதைக் குறிப்பிட வேண்டும். வருடத்தின் நீண்ட காலம் நிறுவனம் மூடப்பட்டிருந்ததும் , கணிசமான அளவு ஊழியர்கள் இந் நோயினால் பீடிக்கப்பட்டு இருந்தமையும், செயற்பாடுகளின் ஆக்கத்திறனில் பாதிப்பு ஏற்பட்டதையும் குறிப்பிட வேண்டும். தகவல் தொழில்நுட்பத் துறையில் தேசிய நிறுவனம் மற்றும் ஒழுங்கமைப்புக்களின் கீழ் செயற்படுவதற்கு தேசிய நூலகம் மற்றும் இலங்கை மன்றக் கல்லூரியுடன் இணைந்து Office 365 மென்பொருளை இலங்கைப் பொது நூலகங்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பட்டியலாக்கச் செயற்பாடுகளின் போது கணனிப் பாவனை பரந்தளவில் உள்ளதால் கணினிப் பட்டியாலக்கத்திற்குரிய பொதுக் கோட்பாடு MARC 21 (Machine Readable Catalogue) அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் கணினிமயப் பட்டியலாக்கத்தின் போது சகல நூலகங்களிலும் உள்ள கணினிமயப்படுத்தப்பட்ட நூற்பட்டியலானது ஒத்த விதத்தில் இருத்தலாகும். யுனெஸ்கோ அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் உலகின் ஞாபகத்தைப் பேணுதல் தொடர்பான (MOW) செயற் திட்டத்தின் கீழ் இந்நாட்டில் உள்ள மஹாவம்ச ஓலைச் சுவடியை மிகவும் பழைமை வாய்ந்த ஆவணமாகக் கருதி பெயரை விதந்துரைப்பதற்கான பத்திரத்தைத் தயாரித்து யுனெஸ்கோவின் உலகின் ஞாபகத்தைக் காப்போம் செயற்திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நாட்டு தும்பர ரட்ட களால சம்பிரதாயம் உலகின் தொட்டுணரமுடியாத கலாசார ஆவணத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. 'பசயென் அனாகத்தயட்ட' பஸ்வண்டி நூலகச் செயற்திட்டம் மற்றும் “ நாட்டிற்கு பெறுமதியான நூல் “ 10,000 நூல்களை எழுதும் செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இவற்றிற்கு

மேலதிகமாக பல செயற்திட்டங்களை இவ்வருடத்தில் முன்னெடுக்கக்கூடியதாக இருந்ததுடன், இவற்றை சாத்தியப்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கிய தலைவர், பணிப்பாளர் சபை, ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், சபையின் சகலருக்கும், இவ் அறிக்கையை தயார் செய்த மூலோபாயத் திட்டமிடல் பிரிவின் தலைவர் உட்பட ஊழியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டபிள்யு. சுனில்
பணிப்பாளர் நாயகம்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

நிருவாக அறிக்கை–2020

தொலை நோக்கு:

சகல மக்களுக்கும் நூலக தகவல் சேவையை வழங்கும் அறிவின் தேசிய கேந்திரமாக இருத்தல்

குறிக்கோள் :

அறிவுசார் சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தில் மக்களின் அறிவுக்கான உரிமையைப் பாதுகாத்தல், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல், நூலக சேவையின் வினைத்திறனுக்கு தகவல்த் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் பாவனையை ஊக்குவித்தல், நூல் பட்டியலாக்க வசதிகளை வழங்குதல் மற்றும் நூல் வெளியீட்டிற்கு அநுசரணை வழங்குதல்

இலக்கும் நோக்கமும் :

- இலங்கையில் நூலகங்கள், தகவல் மற்றும் அதனுடன் இணைந்த சகல சேவைகளின் பொருட்டும் தலைமைத்துவம் தாங்குதல்
- நாட்டின் உள்ளோ அல்லது அதற்கு வெளியிலோ எழுதப்பட்ட, அச்சிடப்பட்ட, அல்லது வேறுவிதமாக வெளியிடப்பட்ட நூலக சாதனங்கள் தொடர்பான பரிபூரண தேசிய சேகரிப்பொன்றை ஏற்படுத்துதல்.
- நூற்பட்டியற் கட்டுப்பாடு மற்றும் ஆவணவாக்கற் சேவையைத் தாபித்து கொண்டு நடத்துதல்
- நூலகம் மற்றும் தகவல் சேவை தொடர்பான கல்வி, பயிற்சி மற்றும் தொழிற் துறை தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனைகளை வழங்குதலும் நியமங்களை உருவாக்குதலும்.
- உள்நாட்டு நூலக அபிவிருத்தியின் பொருட்டான மனித வள ஒழுங்கமைப்பு மற்றும் பௌதீக வள அபிவிருத்தி
- உள்நாட்டில் நூல் வெளியீட்டுக்கு உதவுதலும் வாசிப்பு அபிவிருத்தியும்.
- நூலக தகவல் சேவைகளின் போது தகவல் தொழில் நுட்பப் பாவனையை ஊக்குவித்தல்.
- நூலக தகவல் துறை தொடர்பாக தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்தில் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்களுடன் கூட்டுறவை அபிவிருத்தி செய்தல்
- பல்வேறுபட்ட பிரிவுசார் மக்களின் கலாசாரம் மற்றும் தனித்துவத்திற்கு மதிப்பளித்து அந்நியோன்யமாக இணைந்து வாழ்வதை உறுதிப்படுத்தும் விதத்தில் நூலக தகவல் சேவைகளை ஒழுங்கமைத்தல்
- சிறப்பிலக்கிய ஆய்வு வேலைகளின் போது தேவைப்படும் வளங்களையும், சேவைகளையும் ஒழுங்குபடுத்தி வழங்குதல்.

(1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது)

நிறுவனத்தின் நோக்கம்

நாடொன்றின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு மக்களின் அறிவை அபிவிருத்தி செய்தல் மிக முக்கியமாகும். சமூகத்தின் பல்வேறு சமூகப் பிரிவுகளுக்கும் தேவையான அறிவை விஞ்ஞான ரீதியில் ஒழுங்குமுறையில் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே நாடொன்றின் நூலகக் கட்டமைப்பின் அடிப்படை நோக்கமாகும். இலங்கையில் நூலகக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை தாபிக்கப்பட்டதுடன் அதன் சேவைகள் 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினூடாக மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் செயற்பாடுகள் இரு முக்கிய பிரிவுகளின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. அவையாவன,

(அ) தேசியநூலக ஆவணவாக்கல் மத்தியநிலையத்தைக் கொண்டு நடத்துதலும்

(ஆ) தேசிய மட்டத்தில் நூலக சேவைகள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதலுமாகும்.

தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம் இலங்கையின் தேசிய நூலகமாக இருப்பதுடன்,அது நாட்டில்உள்ள ஏனைய நூலகங்களின் தாய்நூலகமாகவும் செயற்படுகின்றது. அதே போல தேசிய மட்டத்தில் நூலக அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் நூலகங்களுக்கான மதியுரைச் சேவையை வழங்குதல், நூலகங்களை அபிவிருத்தி செய்தல், நூலகத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மதிப்பாய்வுச் செயற்பாடுகளை நடத்துதல், நூலக வளங்களைப் பெற்றுக் கொடுத்தல், நூற் கண்காட்சிகளை நடத்துதல், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பல்வேறு செயற் திட்டங்களை நடத்துதல், பிரதேச மட்டத்தில் எண்மய நூலகங்களை ஆரம்பிப்பதற்கு ஒத்தாசைகளை வழங்குதல், நூல்களைப் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு நூலகங்களில் பேணல் மத்திய நிலையங்களை உருவாக்குதல், நூலகங்களைத் தரநிர்ணயம் செய்தல், நூலகத்துறைசார் விசேட தினங்களைக் கொண்டாடுதல், மாகாணசபை மட்டத்தில் நூலகங்களைத் தரமுயர்துவதற்கு மாகாண நூலக சேவைகள் சபைகளுடன் இணைந்து செயற்படுதல், பல்வேறு அனர்த்தங்களினால் பாதிப்படைந்த நூலகங்களை அபிவிருத்தி செய்தல், நூலகர்களைப் பயிற்றுவித்தல், நூலகக் கூட்டுறவுச் செயற்திட்டங்களை ஒழுங்கு படுத்துதல், நூல் வெளியீட்டிற்கான உதவிகளை வழங்குதல், தேசிய நூலகத்தில் தகவல்களைக் கணனி மயப்படுத்துதல் மற்றும் அந்த தகவல்களின் மூலம் எண்மய நூலகத்தை நடைமுறைப்படுத்திச் செல்தல் போன்ற பல செயற்திட்டங்கள் நடமுறைப் படுத்தப்படுகின்றன.

1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைச் சட்டத்தின் 3 (ஆ) பிரிவின் பிரகாரம் கௌரவ கல்வி அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபையானது 2020.12.31 ஆம் திகதி கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு இருந்தது.

(01 திரு. சோனால குணவர்த்தன – (தலைவர்) (2020 ஜனவரி 1ம் திகதியில் இருந்து)

புதவி நிலை அங்கத்தவர்கள்

(02) திரு. என்.எச். எம். சித்திரானந்த (2020 ஜனவரி மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரை) . செயலாளர் கல்வி அமைச்சு. திரு. ஆர்.எம்.எம். ரத்நாயக்க- மேலதிகச் செயலாளர் (2020 யூன் மாதம்), திரு. எல்.எம்.டி. தர்மசேன- மேலதிகச் செயலாளர் (2020 ஜுலை மாதத்தில் இருந்து) (கல்வி அமைச்சு) செயலாளருக்காக

(03) திரு. என்.யு.என். மெண்டிஸ். மேலதிகச் செயலாளர் (பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு) (2020 ஜனவரி மாதம் தொடக்கம்)

(04) திருமதி. அனோஜா பீ குருகே- மேலதிக செயலாளர் (உள்ளகச் செயற்பாடு வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு(2020 ஜனவரி மாதம் தொடக்கம்)

(05) கலாநிதி (திருமதி) என்.டி. விஜேசுந்தர. தலைவர் (இலங்கை நூலக சங்கம்) (2020 ஜனவரி மாதம் தொடக்கம் ஓகஸ்ற் மாதம் வரை) கலாநிதி (திரு) றுவன் கமகே . தலைவர் (இலங்கை நூலக சங்கம்) (2020 செப்ரெம்பர் மாதம் தொடக்கம்)

(06) பேராசிரியர் திரு. ரஞ்சித் சேனாரத்ன – தலைவர் (தேசிய விஞ்ஞான மன்றம்) (2020 யூலை மாதம் தொடக்கம்)

(07) திருமதி. டீ. எச். ஆர்.டீ. விஜேசிங்க – பிரதிப் பணிப்பாளர் (நிதி அமைச்சு) (2020 ஜனவரி மாதம் தொடக்கம்)

(08) திரு. மஹிந்த பீ. ஹேரத் –பிரதான முகாமைத்துவ அதிகாரி (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம்) (2020 ஜனவரி மாதம் தொடக்கம்)

ஏனைய அங்கத்தவர்கள்

(09) கலாநிதி திருமதி. ஏ.டபிள்யு.ஏ. பிரியங்வதா லக்மாலி வணிகசூரிய (2020 ஜனவரி மாதம் தொடக்கம்)

(10) பேராசிரியர் திருமதி குசுமா கருணாரத்ன - (2020 ஜனவரி மாதம் தொடக்கம்)

(11) கலாநிதி. திரு ரத்னபால விக்கிரமசிங்ஹ (2020 ஜனவரி மாதம் தொடக்கம்)

(12) திரு. ராமசாமி சிவராசா (2020 ஜனவரி மாதம் தொடக்கம்)

(13) திரு. ஏச். டீ. பிரேமசிறி (2020 பெப்ரவரி மாதம் தொடக்கம்)

(14) திரு. காமினி சமரநாயக்க (2020 பெப்ரவரி மாதம் தொடக்கம்)

2020 ஆம் ஆண்டில் மாதாந்தம் 07 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. நாட்டில் நடைபெற்ற கொவிட் -19 தொற்றுக் காரணமாக பிரயாணக் கட்டுப்பாடு மற்றும் தொற்றுத் தடை ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டமையால் எஞ்சிய கூட்டங்களை நடத்தமுடியவில்லை.

மதியுரைக் குழுக்களின் கூட்டங்கள்

நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகள் தொடர்பாகவும் மதியுரைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நியமிக்கப்பட்ட மதியுரைக் குழுக்கள் இவ்வருடத்தில் கீழ்க் குறிபிடப்பட்டுள்ளவாறு கூடின.

மதியுரைக்குழு	பிரிவு	கூட்டம் நடத்தப்பட்டதிகதி
தேசிய நூலக மதியுரைக் குழு	வாசகர் சேவை மற்றும் நூலீட்டற் பிரிவு	2020.06.25, 2020.08.17, 2020.12.22

நூற்பட்டியலாக்கக் கட்டுப்பாட்டு மதியுரைக் குழு	நூற்பட்டியற் கட்டுப்பாட்டுப் பிரிவு	2020.02.25
நூலகத் தரநிர்ணயம் செய்வ-தற்கான உபகுழு	நூலக கூட்டுறவு பிரிவு	2020.07.21,
கல்விப் பயிற்சி மற்றும் கூட்டு-றவுச் செயற்திட்டம் தொடர்பான மதியுரைக் குழு	நூ லக,பயிற்சி, மற்றும் நூலக கூட்டுறவு பிரிவு	2020.09.08
வெளியீட்டு மதியுரைக்குழு	வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு	2020.02.12, 2020.02.26 2020.08.12, 2020.09.09, 2020.12.31
அச்சீட்டு மதியுரைக்குழு		2020.03.12, 2020.06.30 2020.09.22, 2020.10.09
புதிய வெளியீடுகள் கொள்வனவு செய்வத்கான ஆலோசனைக் குழு	.	2020.11.20, 2020.12.07
சிறுவர் மற்றும் பதின்ம வயதினர் இலக்கிய மதியுரைக் குழு	வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு	2020.03.12, 2020.09.22, 2020.10.09
நூலக ஆய்வு மதியுரைக் குழு	நூலக அபிவிருத்திப் பிரிவு	2020.02.27, 2020.08.27
கணக்காய்வு மற்றும் முகாமைத்-துவக் குழு	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு	2020.07.13, 2020.12.04

அலுவலக ஊழியர் விபரம்

சேவையில் இருந்து விலகுதல் :

பெயர்	பதவி	திகதி
திருமதி.எச்.டப்ளிவ்.கே.எஸ். புஷ்பகாந்தி	உதவிப் பணிப்பாளர் தரம் II	2020.03.31
திருமதி. வாசனா எல்லாவெல	உள்ளகக் கணக்காய்வாளர் தரம் II	2020.05.29
திருமதி. ஏச்.டி.டி.த சில்வா	தகவல் உதவியாளர் தரம் III	2020.02.28
திருமதி.கே.எஸ்.எஸ். குணசிங்ஹ		2020.06.30
திரு. டீ.எஸ். கன்னங்கர	முகாமைத்துவ உதவியாளர் தரம் III	2020.08.25
திருமதி.எம்.ஏ.எஸ். மதுரப்பெரும		2020.09.11
ஓய்வு பெறல்		
திரு.ஈ.பீ.சுமதிபால	தகவல் உதவியாளர் தரம் I	2020.04.01
பதவி உயர்வு		
திருமதி. ஏ.வீ.எஸ்.டீ. சுபசிங்ஹ	முகாமைத்துவ உதவியாளர் தரம் iii	2020.11.02

தரம் உயர்வு		
திரு.எம்.ஈ.சீ.டீ.ஈ. செனெவிரத்ன	தகவல் உதவியாளர் தரம் I	2020.04.01
திரு.பீ.டீ.பீ.எஸ். பெரேரா		
திரு.டீ.டீ. சுமணசிரி		
திருமதி. எல்.ரீ.யு. விதானகே		
திரு. ஜீ.ஐ.என்.த சில்வா		
செல்வி.ஆர்.கே.ஏ.டீ.எம்.வீ.ரத்னசேகர		
திருமதி.எஸ்.யு. விஜேதிலக		2020.05.02
திருமதி.எம்.ரீ.எஸ்.சபாயா		2020.02.09
செல்வி.பீ.ஆர்.வை.எம். ப்ரியாணி	முகாமைத்துவ உதவியாளர் தரம் I	2018.06.01
திருமதி.எல்.எச்.ரீ. ரங்கிக்கா		2018.10.26
திருமதி.கே.கே.எஸ்.த. சில்வா		2019.01.04
திருமதி. ஏம்.பீ. லீலாவதி	நூலக உதவியாளர் தரம் I	2013.05.01
திரு.டீ.ஏ.பீ. சுசந்த		2019.12.31
திரு.கே.எச்.எம். நிலந்த		2016.08.15
திரு .கே.பீ.சமத் சந்தன		2018.03.02
திருமதி.ஏ.கே. குசுமாவதி		2016.12.16
திரு. டீ. எஸ். பத்திரண	சாரதி தரம் I	2017.09.23

2020.12.31 ஆம் திகதிய தேசிய நூலக ஆவணவாக்கல் சேவை சபையின் ஊழியர் சபை கீழ் வருமாறாகும்.

பதவி	சேவையில் ஈடுபட்டுள்ளோரின் எண்ணிக்கை	வெற்றிடம் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	01	-
பணிப்பாளர் (நிதி மற்றும் நிருவாகம்)	01	-
பணிப்பாளர் (தொழில்)	02	-
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்)	01	-
பிரதிப் பணிப்பாளர் (தொழில்)	-	03
உதவிப் பணிப்பாளர் (நிதி)	01	-
உதவிப் பணிப்பாளர்	08	01
உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில் நுட்பம்)	01	-
உதவிப் பணிப்பாளர் (பேணல்)	01	-
உள்ளகக் கணக்காய்வாளர்	-	01
வெளியீட்டு அலுவலர்	01	- -

நிருவாகச் செயலாளர்	-	01
நிருவாக அலுவலர்	01	-
பேணல் அலுவலர்	-	01
ஆய்வு அலுவலர்	01	-
விரிவாக்கல் அலுவலர்	-	01
விற்பனை அபிவிருத்தி அலுவலர்	01	-
பயிற்சி அளிக்கும் அலுவலர்	01	-
முறைமைப் பகுப்பாய்வாளர்	-	01
நூலக ஆவணவாக்கல் அலுவலர்	03	06
பராமரிப்பு அலுவலர்	01	-
கணக்கிடல் அலுவலர்	-	01
நூலக அபிவிருத்தி உதவியாளர்	03	09
தகவல் தொழில் நுட்ப உதவியாளர்	01	-
தகவல் உதவியாளர்	42	08
ஆவண மறுசீரமைப்பாளர்	01	01
முகாமைத்துவ உதவியாளர்	28	08
சாரதிகள்	05	01
மின் தொழிலாளி	01	-
நூல் மட்டை கட்டுபவர்கள்	04	02
நூலக சேவகர்கள்	13	03
அலுவலக சேவகர்கள்	19	07
மொத்தம்	142	55

ஊழியர் பயிற்சி

உள்நாட்டுப் பயிற்சிகள் (குறுங்காலம்)

பயிற்சிப்பட்டறை	பங்குபற்றிய அலுவலர்	இடம்	திகதி	மாநாட்டுக் கட்டணம் ரூபா.
முன் வழங்கல் தொடர் பான பயிற்சிப் பாடநெறி	சபையின் சிரேஷ்ட அலுவலர்களின் பொருட்டு	தே.நூ.ஆ.சே.ச.	2020.01.29	27,840.00

உள்நாட்டு பாட நெறிகள் (நீண்டகாலம்)

பாட நெறியின் பெயர்	அலுவலர் பெயர்	இடம்	காலம்	பயிற்சி நெறிக் கட்டணம் (ரூ.)
தகவல் தொழில் நுட்பம் தொடர்பான பட்டப் பின்படிப்பு டிப்ளோமாப் பாட-நெறி	திருமதி. ஐ. எம் வி ஜே சு ந் த ர (நூலக ஆவணவா-க்கல் அலுவலர்) .	க ள னி ப ் பல்கலைக்கழகம்	ஒரு வருடம்	50,000.00

வெளிநாட்டுப் பயிற்சி நெறிகள்

செயற்திட்டம்	அலுவலர்கள் பெயர்	நாடு	காலம்
அதிகரித்துவரும் நவீன உற்பத்தியாளர்களின் வலையமைப்பு மற்றும் தென்னாசிய பிராந்திய நூலக தலைவர்களின் ஆற்றலை அபிவிருத்தி செய்தல்	திருமதி.எச். டப்ளிவ். எஸ். புஸ்பகாந்தி (உதவிப் பணிப்பாளர் தரம் II)	இந்தியா	2020.02.06 தொடக்கம் 2020.02.13 வரை

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பல்வேறு பிரிவுகளின் பொறுப்புக்களும் அவற்றின் அபிவிருத்தியும்.

நூலீட்டற் பிரிவு

தேசிய நூலகத்திற்குப் பொருத்தமான நூல்களையும், இலத்திரனியல் ஊடகங்கள், மற்றும் ஏனைய பிரிவுகளைச் சார்ந்த தகவல் மூலங்களைப் பெற்றுக் கொள்வதே நூலீட்டற் பிரிவின் பொறுப்பும் கடமையுமாகும். தேசிய நூலகத்தின் நூலீட்டற் கொள்கைக்கு ஏற்ப (i) இலங்கையில் வெளியிடப்படும் வெளியீடுகள் (ii) இலங்கை பற்றி வெளிநாடுகளில் வெளியிடப்படும் வெளியீடுகள் (iii) இலங்கையரால் வெளிநாடுகளில் வெளியிடப்படும் வெளியீடுகள் (iv) முக்கிய உசாத்துணை நூல்கள் (v) பிற நூலகங்களினால் பெற்றுக் கொள்ள முடியாததும் ஆனால் ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கு அவசியமானவையுமான உசாத்துணை நூல்கள் (vi) நூலக தகவல் விஞ்ஞானத் தகவற் துறை தொடர்பான வெளியீடுகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இதற்கும் மேலால் ISBN, ISSN மற்றும் ISMN இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் வெளியீட்டாளர் வைப்பிலிடும் பிரதிகளும் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. மேற் குறிப்பிடப்பட்டுள்ள (i), (ii), (iii) மற்றும் (vi) பிரிவிற்குரிய வெளியீடுகளில் இரு (02) பிரதிகள் வீதமும், உசாத்துணை நூல்களில் ஒரு பிரதி வீதமும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உசாத்துணை நூல்களைப் பெற்றுக் கொள்ளும் போது காலத்திற்கு ஏற்றவிதத்தில் அவற்றின் புதிய பதிப்புக்கள் கொள்வனவு செய்யப்படுகிறன. இலங்கைத் தேசிய நூலகத்திற்கு வெளியீடுகளை ஈட்டல் செய்யும்போது முக்கியமான 04 முறைகள் பின்பற்றப்படுகின்றன.

(i) கட்டாய வைப்புச் சட்டத்தின்கீழ் தேசிய சுவடிகள் கூடத் திணைக்களத்தில் இருந்து பிரதிகளைப் பெறுதல்

(ii) கொள்வனவு செய்தல்

(iii) அன்பளிப்பு

(iv) பரிமாற்ற (Exchange services) தின் கீழ் வெளியீடுகளைப் பெற்றுக் கொள்தல்

சட்டவைப்பு பிரதி முறையின் கீழ் தேசிய சுவடிகள் கூடத் திணைக்களத்தில் இருந்து பிரதிகளைப் பெற்றுக் கொள்தல்.

1885 ஆம் ஆண்டின் அச்சீட்டாளர் வெளியீட்டாளர் கட்டளைச் சட்டத்தில் 1976 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட திருத்தத்திற்கு அமைவாக, இலங்கையில் வெளியிடப்படும் சகல வெளியீடுகளினதும் பிரதி ஒன்று தேசிய நூலகச் சேகரிப்புக்கு சட்டரீதியில் உரித்துடையதாகின்றது. இலங்கையில் இச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம் தேசிய சுவடிகள் கூடத் திணைக்களமாகும். அச்சீட்டாளர்களினால் அந் நிறுவனத்தில் வைப்பிலிடப்படும் பிரதிகளுள் ஒரு பிரதி தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்திற்கு வழங்கப்படுகிறது. இதற்கமைய இவ் வருடத்தில் கட்டாய வைப்புச் சட்டத்தின் கீழ் தேசிய நூலகத்தில் வைப்பிலிடப்பட்ட வெளியீடுகளின் விபரம் கீழ்வருமாறு.

வெளியீடுகளின் பிரிவு	பெறப்பட்ட எண்ணிக்கை
நூல்கள்	2266
பருவவெளியீடுகள்	201
வர்த்தமானி	1482
பொலிஸ் வர்த்தமானி	19
சட்டங்கள்	54
சட்டமூலங்கள்	72
ஹன்சாட்	22
புகையிரத அறிவித்தல்கள்	7
தேசத்தி நிவேதன	7
முத்திரை அறிவித்தல்கள்	11
செய்தி மடல்கள்	264
பிறெயில் வெளியீடுகள்	14
நூற்பட்டியல் / சுட்டிகள்	6
நாளாந்த / வாராந்த புதினத்தாள்கள்	12134
செய்தித்திரட்டுக்கள் (சிறு பத்திரிகைகள்)	561

கொள்வனவு செய்தல்

தேசிய நூலகத்திற்குத் தேவையான தகவல்கள் மற்றும் வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ளும் பிரதான வழிகளில் ஒன்று கொள்வனவாகும். உள்நாட்டு வெளியீடுகளில் சட்டவைப்பு முறையின் கீழ் தேசிய நூலகத்திற்குக் கிடைக்கப்பெறாத வெளியீடுகளும், கட்டாய வைப்புச் சட்டத்தின் கீழ் கிடைக்கும் வெளியீடுகளின் மேலதிகப் பிரதிகளும் கொள்வனவு செய்யப்படுகின்றன. அதேபோல வெளிநாட்டு வெளியீடுகளையும், முக்கிய உசாத்துணை நூல்களையும் கொள்வனவு செய்யும் போது உள்நாட்டு, வெளிநாட்டு நூல் விபரப்பட்டியல்கள், நூற் பட்டியல்கள், புதினத்தாள்கள், பருவவெளியீடுகள், இணையம் போன்ற பல்வேறு மூலங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. கொள்வனவுத் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் 693 நூலக தகவல் வளங்களின் கொள்வனவின் பொருட்டு ரூபா 524,283.00 செலவு செய்யப்பட்டுள்ளது. COVID -19 தொற்றின் காரணத்தினால் நீண்டகாலத் தொற்றுத் தடுப்பு ஊரடங்கு மற்றும் நாடு மூடப்பட்டிருந்ததன் காரணத்தினால் கொள்வனவுச் செயற்பாடுகள் பின்னடைவைச் சந்தித்தள்ளது.

இவ்வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட வெளியீடுகள்

வெளியீடுகளின் வகை	பெற்றுக்கொண்ட தொகை
நூல்கள்	681
பட்டப்பின்படிப்பு ஆய்வுக் கட்டுரைகள்	03
உள்நாட்டு வெளிநாட்டு பருவவெளியீடுகள்	09
வெளியீடுகளின் மொத்தத் தொகை	693

அன்பளிப்புக்கள்

இலங்கைத் தேசிய நூலகத்தின் சேகரிப்பை அபிவிருத்தி செய்வதற்கு தனி நபர்களிடம் இருந்தும், பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கும் அன்பளிப்புக்கள் பெரிதும் உதவுகின்றன. 2020 ஆம் ஆண்டில் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அன்பளிப்பாளர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து அன்பளிப்பாக வெளியீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன அவற்றின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அன்பளிப்பு	நூல்களின் எண்ணிக்கை	பருவ வெளியீடுகளின் எண்ணிக்கை
பேராசிரியர் ஹென்றி வீரசிங்ஹ சேகரிப்பு	268	-
பேராசிரியர் மைக்கல் றொபேட்டஸ் சேகரிப்பு	700	-
ஈ.ரீ. கன்னங்கர சேகரிப்பு	132	-
வழக்கறியர் எஸ். தளயசிங்ஹம் சேகரிப்பு	20	-
ISBN வைப்புப் பிரதி	1349	-
ISSN வைப்புப் பிரதி	-	43
ஏனைய அன்பளிப்புகள்	71	163

நூல் பரிமாற்றச் சேவை

இலங்கைத் தேசிய நூலகத்திற்கு வெளியீடுகளைப் பெற்றுக்கொள்ளும் மேலு மொரு வழியாக பரிமாற்றச் சேவை (Exchange Services) உள்ளது. இதன்கீழ் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதுடன், சபையினால் வெளியிடப்படும் வெளியீடுகள் அந் நிறுவனங்களினாலும், அந்நிறுவனங்களின் வெளியீடுகள் தேசிய நூலகத்தினாலும் பெற்றுக் கொள்ளப்படுகிறன. இந்த வருடம் வெளிநாட்டு நூற்பரிமாற்றச் சேவையின்கீழ் 19 நூல்களும், 50 பருவவெளியீடுகளும், 01 இறுவட்டும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

தேசிய நூலகம் பெற்றுக்கொள்ளும் வெளியீடுகளுள் விலை குறிப்பிடப்படாத வெளியீடுகளுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கு தேவையான பொது விலைக் கொள்கை ஒன்றை தயாரித்தல்

இலங்கைத் தேசிய நூலகத்திற்காகப் பெற்றுக் கொள்ளப்படும் விலை குறிப்பிடப்படாத வெளியீடுகளுக்கான விலையைத் தீர்மானித்துக் கொள்வதற்காக பொதுக் கொள்கை விளக்க மொன்று தயாரிக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டுள்ளது. எனினும் இக் கொள்கை விளக்கத்தைத் தேசிய கொள்கை விளக்கமாக இந்நாட்டில் உள்ள சகல நூலகங்களுக்கும் பொருந்தும் வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

Koha நூலக மென்பாண்டத்தின் மூலம் நூலீட்டற் செயற்பாடுகளை மேற்கொள்ளல்

இலங்கைத் தேசிய நூலகத்தின் கணனி மயப்படுத்தப்பட்ட பட்டியலாக்கத்தின் பொருட்டு Koha நூலக மென்பாண்டம் உபயோகிக்கப்படுகிறது. இவ்வருடம் Koha கணனி மென்பாண்டத்தை உபயோகப்படுத்தி கணனி மயப்படுத்தப்பட்ட பட்டியலில் 10,194 தகவல்கள் உட்புகுத்தப்பட்டுள்ளன.

கணனிச் செயற்பாடுகளின் பொருட்டு RFID-Tag முறைமையை பயன்படுத்துதல்

இலங்கைத் தேசிய நூலகத்தின் நூலக சாதனங்களை பாதுகாப்பதற்கான உபாயமாகவும் புள்ளிவிபரச் செயற்பாடுகளை இலகுபடுத்துமுகமாகவும் RFID-Tag முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச் செயற்திட்டத்தைப் பூரணப்படுத்துவதற்கு தேசிய நூலகத்தின் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் கதவுகளில் இலத்திரனியல் கதவுகளை (e-gates) பொருத்தவேண்டியுள்ளது. இலங்கையைப் போல உலகின் முன்னணி நூலகங்களிலும் இம்முறைமை பாவனையில் உள்ளது. நூலீட்டற் செயற்பாடுகளின் பொருட்டு RFID- Tag முறைமை கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வருடத்தில் சுமார் 8723 வெளியீடுகள் RFID- Tag யில் உட்புகுத்தப்பட்டுள்ளன.

தேசிய நூலகச் சேகரிப்பை அபிவிருத்தி செய்வதற்கான கொள்கை விளக்கமொன்றை தயாரித்தல

தேசிய நூலகத்தின் சேகரிப்பை அபிவிருத்தி செய்வதற்கான கொள்கைத் திட்ட வரைபு ஒன்று சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டு தேசிய நூலகத்தின் இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளதுடன் , தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்க்கும் வேலை நடைபெற்று வருகின்றது.

நூற்சேர்ப்புப் பட்டியல் தெகுத்தல்

நூல் விபரத் தகவல்களை Koha தரவுத் தளத்தினூடாக் பெற்றுக் கொள்ளக்கூடிய முறையில் நூற்சேர்ப்புப் பட்டியலானது 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 2020 ஆம் ஆண்டின் யூன் மாதம் வரையுமான தொகுத்தல் வேலை நிறைவடைந்துள்ளது.

வாசகர் சேவைப் பிரிவு

தேசிய நூலகத்தில் வைப்பிலிடப்பட்டுள்ள நூல்கள் மற்றும் ஏனைய நூலக சாதனங்களை வாசகர்கள் பரிசீலிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பது இப் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். கட்டிடத்தைப் புதுப்பித்தமைத்தற் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் கடந்த வருடங்களுக்குடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இவ் வருடத்திலும் தேசிய நூலகத்தின் வாசகர் சேவைப் பிரிவினால் அதிகளவிலான வாசகர்களுக்குச் சேவை வழங்கப்பட்டுள்ளது. இவ் வருடத்தில் தேசிய நூலகத்தின் சேகரிப்பைப் பரிசீலனை செய்தவர்களுள் முக்கியமானவர்களாக உயர் கல்வி நிறுவனங்கள் உட்பட பிற ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்புடைய ஆராய்ச்சியாளர்கள், பட்டப் பின் படிப்பு மற்றும் பட்டப்படிப்புப் பாட நெறிகளைப் பின்பற்றும் மாணவர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட பல்வேறு துறைசார் வாசகர்களும் வருகைதந்திருந்தனர். அவர்களின் தேவைகளின் பொருட்டு வாசகர் சேவைப் பிரிவின் மூன்று மாடிகளிலும் மூன்று பிரதான வாசிப்புக் கூடங்களும், கீழ்த்தளத்தில் விசேட தகவல் மேசை ஒன்றும் (Information Counter) செயற்பட்டு வருகின்றது. கட்டிடத்தைப் புதுப்பித்தமைக்கும் சேவை ஆரம்பித்ததுடன் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் மாடிகளில் புதுப்பித்தமைக்கும் செயற்பாடுகளுக்குத. தேவையான இட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. கட்டிடப் புதுப்பித்தமைத்தல் செயற்பாடுகளின் காரணத்தால் இம் மாடிகளில் உள்ள நூற் சேகரிப்புக்களை நடைமுறைப் படுத்திச் செல்வதும் வாசகர் சேவையை நடைமுறைப் படுத்திச் செல்வதும் கடினமாக உள்ளது.

வாசகர் பதிவு

இந்த வருடத்தில் கீழ்க்காணப்படும் விதமாக இலங்கைத் தேசிய நூலகத்திற்கு வாசகர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளதுடன் அதனால் பெற்றுக்கொண்ட வருமானம் ரூபா. 270,100/-ஆகும்.

அங்கத்தவர் வகை	அங்கத்தவர் எண்ணிக்கை
வாழ்நாள் அங்கத்துவம்	75
வருடாந்த அங்கத்துவம்	41
மூன்றுமாத அங்கத்துவம்	267
நாளாந்த அங்கத்துவம்	2131

உசாத்துணை சேவை மற்றும் தகவல் வழங்கும் சேவை

இவ் வருடத்தில் தேசிய நூலகத்தின் பல்வேறு தகவல் வளங்களினூடாக வாசகர்களுக்கு உசாத்துணை சேவைகள் (Reference Services) மற்றும் தகவல் சேவைகள் (Information Services) வழங்கப்பட்டுள்ளன. அதிகளவில் வாசகர்களினால் உபயோகப்படுத்தப்படும் தகவல் வளங்களாக புதினத்தாள்கள், பருவ வெளியீடுகள், அரசாங்க வெளியீடுகள் போன்றனவற்றை இனங்காண முடியும். தேசிய நூலகச் சேகரிப்பில் இருந்து வாசகரிகளின் பாவனைக்காக 2020 ஆம் ஆண்டு 122,216 தகவல் வளங்கள் வழங்கப்பட்டுள்ளன.

விசாரணைச் சேவை

பல்வேறு விடயங்கள் தொடர்பான தகவல்களைக் கேட்டுத் தனிநபர்களிடம் இருந்து வரும் விசாரணைகளுக்கு பதில் வழங்குவதும் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் மேலுமொரு

செயற்பாடாகும். இதன் கீழ் கடிதம், இலத்திரனியற் தபால் மற்றும் தொலைபேசியூடாகவும், நேரடியாகவும் வரும் விசாரணைகளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் விசாரணைச் சேவையின் கீழ் 6,342 வாசகர்களுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனால் ரூபா. 97,500.00 வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

நிழற்படப் பிரதிச் சேவை

தேசிய நூலகத்தின் பல்வேறு சேகரிப்புக்களில் உள்ள தகவல்களை நிழற்படப் பிரதிகள் மூலம் வாசகர்கள் பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் இவ்விதம் பிரதிகளை வழங்கியதன் மூலம் ரூபா 1,219,715.00 வருமானமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

தேசிய நூலகத்தைப் பார்வையிடல்

கட்டிடத்தில் புதுப்பித்தமைக்கப்படும் வேலைகள் நடந்துகொண்டிருக்கும் காரணத்தினால் தேசிய நூலகத்தைப் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப்பட்டு இருந்ததால் 2020 ஆம் ஆண்டில் தேசிய நூலகத்தைப் பார்வையிடுவதற்கு வாசகர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாததுடன், தேசிய நூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள “ Meet an expert “ செயற் திட்டத்தின் கீழ் இரண்டு தொடரறா இணையவழி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திகதி	தலைப்பு	வளவாளர்கள்
2020.09.08	Literacy Teaching and Learning in the COVID – 19 Crisis and Beyond	பேராசிரியர் திருமதி நாமளீ சுரவீர
2020.12.30	Bibliotheraphy Enhancing Mental Health for All	திருமதி. சமிதா எத்துள்தொர ஆராச்சி

வாசகர் கல்விச் செயற்திட்டங்களை ஒழுங்குசெய்தல்

இலங்கைத் தேசிய நூலகத்தை உபயோகப்படுத்தும் வாசகர்களுக்கு தகவல் தேடும் முறை தொடர்பாக விளக்கத்தை பெற்றுக் கொடுப்பதுடன், தேவையான பயிற்சிகளும் பரந்தளவில் வழங்கப்பட்டுகிறது.

தேசிய நூலக நண்பர்கள் ஒழுங்கமைப்பு

இலங்கைத் தேசிய நூலகம் மற்றும் அதன் சேவைகள் தொடர்பாக மக்களை அறிவூட்டும் நோக்கத்துடன் “தேசிய நூலகத்தின் நண்பர்கள்” ஒழுங்கமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இவ் அமைப்பின் பங்களிப்புடன் இலங்கைத் தேசிய நூலகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. 2020.01.21 ஆம் திகதி தேசிய நூலகத்தின் நண்பர்கள் அமைப்பின் 05வது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டதுடன், அந்த அமைப்பின் மூலம் மாதாந்தம் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படும் திரைப்படக் காட்சியின் கீழ் பின்வரும் திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

திரைப்படத்தின் பெயர்	திரைப்படம் காட்டப்பட்ட திகதி
ஆகாச குசும் (சிங்களம்)	2020.02.28
The Theory of Everything	2020.09.29

சபையின் கட்டிடத்தை புதுப்பித்தமைத்தல் செயற்பாடு

சபையின் கட்டிடத்தைப் புதுப்பித்தமைத்தல் தொழிற்பாடானது நடைபெற்று வருவதினால் அரசாங்க வெளியீடுகளின் சேகரிப்பானது வாசகர்களின் பரிசீலனைக்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய விதத்தில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், வெளிநாட்டு நூற்சேகரிப்பின் இருப்பெடுக்கும் வேலை நடத்தப்பட்டதுடன், வாசகர்களுக்கு தகவல் தேடல் மற்றும் இணைய வசதிகளை செயற்திற திறனுடன் ஒழுங்குபடுத்திக் கொடுப்பதற்காக வாசகர் சேவைப்பிரிவின் கீழ்த் தளத்தில் இணைய வசதியையும் தரவுத் தள வசதியையும் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பப் பிரிவு

இலங்கைத் தேசிய நூலகத்தின் கணனிச் சேவைகள் மற்றும் நூலகத் துறையுடன் தொடர்புடைய தகவற் தொழில் நுட்பத்தை ஈடுபடுத்துவது தொடர்பான செயற்பாடுகள் மற்றும் இத்துறை தொடர்பாக தேசிய மட்டத்தில் மதியுரை சேவைகளை வழங்குவதும் இப்பிரிவின் முக்கிய பொறுப்பாகும். இதற்கும் மேலால் தேசிய எண்மய நூலகத்தின் செயற்பாடுகளுக்குக் தேவையான தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக் கொடுத்தல், அறிவு அபிவிருத்திக்காக எண்மய நூலக அபிவிருத்தி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்திச் செல்வதன் பொருட்டு தேவையான உதவிகளை வழங்குவதுடன் துறையுடன் தொடர்புபட்ட கணனி மென்பாண்டங்களை அபிவிருத்தி செய்தல் இப்பிரிவின் கீழ் நடைபெறும்.

தேசிய நூலகத்தின் வெப் சேவர் (web server) மற்றும் மெயில் சேவரை (mail server) நடைமுறைப்படுத்திச் செல்தல்

நிறுவனத்தின் Web server மற்றும் mail server ஐ நடைமுறைப்படுத்திச் செல்தல், மற்றும் கணனி தரவுத் தளங்களை நடைமுறைப் படுத்திச் செல்தல், நடைமுறையில் உள்ள தரவுத் தளங்களை தற்காலப் படுத்துதல் அதேபோல www.natlib.lk அதிகாரப் பதிவை தற்காலப்படுத்தல் என்பன நடைமுறைப் படுத்தப்பட்டன.

சபையின் Facebook பக்கத்தை தற்காலப் படுத்துதல்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினூடாக நடத்திச் செல்லப்படும் பல்வேறு செயற் திட்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்களை பரந்தளவு வாசகர்களுக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடன் சபையின் Face book பக்கத்தை நடைமுறைப்படுத்திச் செல்வதுடன், சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் சகல செயற் திட்டங்களிளுடனும் தொடர்புடைய விசேட சந்தர்ப்பங்களின் புகைப்படங்களும் Face book பக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவது இப்பிரிவினால் நடத்தப்பட்டு வருகின்றது, இவ்வருடத்தில் Face book பக்கத்தை பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை 13,010 ஆகும்.

சபையின் வீட்டுப் பக்கத்தை தற்காலப்படுத்துதல்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு செயற் திட்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக சபையின் வீட்டுப் பக்கத்தில் (www.natlib,lk) ஊடாக தேவையான பிரச்சார வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் தொலைவிலிருந்து தேசிய நூலகத்தின் சேவைகளை அணுகுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய நூலக பட்டியலுக்கு (OPAC) மேலால் பல்வேறு தரவுத் தளங்கள், சபையின் வெளியீடுகள், புகைப்படங்கள், அறிவித்தல்கள் நூலகத் துறையில் புதிய செயற்பாடுகளுக்குரிய தகவல்கள் போன்றன இதில் உட்புகுத்தப்பட்டுள்ளன. COVID - 19 தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் நூலகங்களும் வாசகர்களும் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் உட்புகுத்தப்பட்டதுடன், நூலகங்களைத் தரநிர்ணயம் செய்வது தொடர்பான தவல்கள், தேசிய நூலகத்தின் சேகரிப்பு அபிவிருத்திக் கோட்பாடு, தேசிய வாசிப்பு மாதம் 2020 இன் சுற்றுநிருபம், வெளியீட்டு உதவிச் செயற்திட்டம் 2020 - 2021 தொடர்பான தகவல்கள், இணையத்தின மூலம் ISBN பெறுதல் மற்றும் அது தொடர்பான விபரங்கள், எண்மய நூலகக் கோட்பாடுகள் உட்பட MARC 21 விபரமான பட்டியலாக்கம் தொடர்பான கையேடும் உட்படுத்தப்பட்டுள்ளன.

தகவல் தொழில் நுட்பம் மற்றும் பயிற்சிச் செயற்பாடுகள்

நிறுவனத்தினால் நடத்தப்படும் பயிற்சி நெறிகளின்போது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான உதவிகள், தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் வழங்கப்படுகிறது. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் தொடர்பாக நூலகர்களை அறிவூட்டுவதன் பொருட்டு நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைகளுக்கு வளவாளர்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சபையில் Easy way கணனி மென்பாண்டப் பாவனை தொடர்பாக, வாசகர் சேவைப் பிரிவு, விற்பனைக் கூடம் மற்றும் களஞ்சியத்திற்குப் பொறுப்பாக உள்ள அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு பயிற்சிப் பாடநெறிகள் நடத்தப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பத் துறையின்தேசிய நிறுவனம் மற்றும் அமைப்புக்களுடன் இணைந்து செயற்படல்

இதன் கீழ் இலங்கைத் தேசிய நூலகம், இலங்கை மன்றக் கல்லூரியுடன் இணைந்து Office 365 மென்பாண்டத்தை பொது நூலகங்களுக்கு அறிமுகம் செய்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

நிறுவனத்தின் சகல பிரிவுகளினதும் கணனிச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்

சபையின் சகல பிரிவுகளிலும் உள்ள கணனி வன் பாண்டங்கள் மற்றும் மென் பாண்டங்களில் ஏற்படும் சிக்கல்களுக்கான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, தேசிய நூலகத்தின் சேவைச் செயற்பாடுகளை இலகுவாக்கும் பொருட்டு தேவையான நடமாடும் தொலைபேசி மென்பாண்டத்தை (Mobile app) ஏற்படுத்துதல் தொடர்பாக தேவையான விபரங்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அதற்கும் மேலால் கனடாவின் ஐக்கிய நாடுகள் சபையின் கற்றல் சங்கத்தின் Skill online Sri Lanka Programmes செயற் திட்டத்தின் பிரச்சார செயற்பாடுகளின் பொருட்டு பங்களிப்புச் செய்யப் பட்டுள்ளதுடன் அதனுடன் தொடர்புடைய வெப் பக்கத்தை உருவாக்குவதற்கு தேவையான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது. சபையினால் தொகுக்கப்படும் “NATNET LANKA” செய்திப் பிரசுரத்தின் 2019 யூலை – டிசம்பர் இதழின் மென் பிரதி தயாரிக்கப் பட்டுள்ளதுடன், சபையின் ஆராய்ச்சிப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்படும் ஆய்வு நுட்பங்கள் தொடர்பான பயிற்சிப் பட்டறையின் (“ Research Methodology Workshop”) பொருட்டு போஸ்டர் மற்றும் பிரசுரங்களைத் தயாரித்தல், தேசிய நூலகத்தின் புதிய இலாஞ்சனையை உருவாக்குதல் மற்றும் கடிதத் தலைப்புக்களின் மென் பிரதிகளைத் தயாரித்தல், தேசிய நூலகச் சட்டத்தின் மென் பிரதியைத் தயாரித்தல், மற்றும் வாசகர் சேவைகள் பிரிவிற்கான துண்டுப்பிரசுரங்கள், உட்பட டிஜிட்டல் நூலக ஒன்றியத்தின் துண்டுப் பிரசுரங்களைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. சபையினால் நடைமுறைப் படுத்தப்படும் நாட்டின் பெறுமதியான நூலிற்கு 10000 ஆயிரம் நூல்கள் எழுதும் செயற்திட்டத்தின் கீழ் சபைக்குக் கிடைக்கப்பட்டுள்ள சுமார் 41,000 சிறுவர்களின் கையெழுத்துப் பிரதிகளின் தரவுகளை உட்புகுத்தும் நோக்கத்துடன் மேலுமொரு தரவுத் தளத்தை உருவாக்குதல் மற்றும் அது தொடர்பான மதியுரைகளைப் பெற்றுக் கொடுத்தல், இலங்கைத் தேசிய நூலகத்துடன் தொடர்புடைய வாசகர்களின் அழைப்பு விபரங்களை சேர்த்துக் கொள்வதன் பொருட்டு Google Sheet இன் மாதிரி ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

நூற்பட்டியற் கட்டுப்பாட்டுப் பிரிவு

நூற்பட்டியற் கட்டுப்பாட்டுப் பிரிவின் முக்கிய பொறுப்பு தேசிய ரீதியில் நூற்பட்டியற் கட்டுப்பாட்டை மேற்கொள்தலாகும். இலங்கைத் தேசிய நூற்பட்டியலைத் தொகுத்தல், கடந்த கால தேசிய நூற்பட்டியலைத் தொகுத்தல், பருவ வெளியீட்டுக் கட்டுரைச் சுட்டி தொகுத்தல், அதிகார பூர்வ கோவைகளைத் தொகுத்தல், விசேட நூற்பட்டியல்கள் மற்றும் தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்தின் ஆவணவாக்கற் செயற்திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்து அதைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்திச் செல்வதுமாகும்.

இலங்கைத் தேசிய நூற் பட்டியல்

இலங்கைத் தேசிய நூற்பட்டியலை வெளியிடுவது தேசிய நூலகத்தின் முக்கிய பொறுப்புக்களுள் ஒன்றாகும். தேசிய நூற்பட்டியல் என்பது நாட்டினுள் வெளியிடப்படும் சகல வெளியீடுகளினதும் தகவல்களை உள்ளடக்கிய ஒரு அதிகார பூர்வமான வெளியீடாகும். இச் செயற்பாட்டை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை 1974 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயற்பாடானது 1962 ஆம் ஆண்டில் இருந்து 1973 ஆம் ஆண்டு வரை தேசிய சுவடிகள் கூடத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதன் பிரகாரம் இலங்கைத் தேசிய நூற்பட்டியலின் 2019 ஆம் ஆண்டின் மார்ச் மாதத் தொகுதியில் இருந்து 2020 பெப்ரவரி மாதத் தொகுதி வரையிலான 12 தொகுதிகளும் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கும் மேலால் 2020 மார்ச் மாதத் தொகுதியின் பொருட்டு வைப்பிலிடப்பட்டுள்ள சிங்கள, தமிழ், ஆங்கில வெளியீடுகள் தூயி தசமதிட்டத்திற்கு அமைவாக பகுப்பாக்கம் செய்யப்பட்டு, காங்கிரஸ் நூலக பொருட் தலைப்புக்கள் இடப்பட்டுள்ளதுடன் Koha தரவுத் தளத்தில் நூற்பட்டிற் தகவல்கள் உட்புகுத்தப்பட்டுள்ளன. இலங்கைத் தேசிய நூற்பட்டியலின் மார்ச் மாதத் தொகுதிக்கு தேவையான தகவல்களை தரவுத் தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ளமுடியும். வெளியிடப்பட்ட சகல தேசிய நூற்பட்டியல்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை தேசிய எண்மய நூலகத்தில் (National Digital Library) சென்று பார்வையிடமுடியும். (www.natlib. lk)

இலங்கை பருவெளியீட்டுக் கட்டுரைச் சுட்டி

இலங்கையில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் பருவ வெளியீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகள் தொடர்பான தகவல்களை வாசகர்கள் இலகுவாக தேடிக் கண்டு பிடிப்பதற்கு வசதியாக பருவவெளியீட்டுக் கட்டுரைச் சுட்டி தொகுக்கப்படுகின்றது. இது காலாண்டு வெளியீடாவதுடன் 2018 - 03ம் தொகுதியில் இருந்து 2019-03 தொகுதி வரை 05 தொகுதிகளைத் தொகுக்கும் வேலை நிறைவடைந்துள்ளது. இதற்கும் மேலால் 2020-1 தொகுதி கணனிமப்படுத்துவதற்கு தயாராக இருப்பதுடன் 2020-2 ம் தொகுதியின் சிங்கள, ஆங்கில பிரிவுகளுக்கான கட்டுரைகளுக்கு பகுப்பாக்க எண் இடப்பட்டுள்ளதுடன் பொருட் தலைப்பும் இடப்பட்டுள்ளது. இத் தகவல்களை சபையின் எண்மய நூலகத்தில் (National Digital Library) சென்று பார்வையிடமுடியும். (www.natlib. lk)

தேசிய நூலகத்தின் தகவல் மூலங்களைப் பட்டியலாக்கம் செய்தல்

தேசிய நூலகத்திற்காகப் பெற்றுக் கொள்ளப்படும் சகல நூலக சாதனங்களினதும் விஞ்ஞான பூர்வமான நூற்பட்டியற் தகவல்களை Koha நூலக கணனி மென்பாண்டத்தை உபயோகித்து கணனி மயப்படுத்தப்பட்ட பட்டியல்களாகத் தயாரித்தலும், தேசிய நூலக நூற்பட்டியலை நடைமுறைப்படுத்திச் செல்லுதலும் இப் பிரிவின் ஏனைய செயற்பாடுகளாகும். தேசிய

நூலகத்தின் சேகரிப்புக்கள் தொடர்பான தகவல்களை வாசகர்கள் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி தேசிய நூலகப் பட்டியலாகும். ஆதலால் தேசிய நூலகத்தின் பட்டியலானது விஞ்ஞான பூர்வமானதாகவும், இலகுவாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்திலும் ஒழுங்கு படுத்தப்படுகிறது. தேசிய நூலகத்திற்காகப் பெறப்பட்ட சகல நூலக சாதனங்களும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக பட்டியாலாக்கம் செய்யப்பட்டு பகுப்பாக்கம் செய்யப்பட்டு காங்கிரஸ் நூலக பொருட் தலைப்புக்கள் இடப்பட்டு கணனிமயப்படுத்தும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 2020 ஆம் ஆண்டில்நூலக தகவல் வளங்கள் 8411 மற்றும் பருவ வெளியீட்டுக் கட்டுரைகள் 1232ம் Koha தரவுத் தளத்தில் உட்புகுத்தப்பட்டுள்ளன. அதற்கும் மேலால் 2011 – 2018 காலப் பகுதிக்குரிய பட்டப் பின்படிப்பு நிபந்தனைகளின் நூற்பட்டியல் தயாரிக்கும் வேலை நிறைவடைந்துள்ளதுடன் ஒன்லைன் தரவுத்தளமாக தொகுக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு மாணவர்களுக்கு ஒன்லைன் பிரவேசத்திற்கான அனுமதியை வழங்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப தொகுப்பு வேலைகள் நிறைவடைந்து தேசிய நூலகத்தின் வெப் பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளது. (www.natlib.lk)

இலங்கைத் தேசிய நூற்பட்டியல் தொகுத்தல் தொடர்பான கொள்கை விளக்கத்தை புதுப்பித்தமைத்தல்

இலங்கைத் தேசிய நூற்பட்டியல் தொகுத்தல் தொடர்பான கொள்கை விளக்கத்தை புதுப்பித்தமைத்தல் தொடர்பாக குழுவொன்றை அமைத்து அக்குழு இனங்கண்ட திருத்தங்கள் ஏதாவது இருக்குமாயின் அவற்றை கொள்கை விளக்கத்தில் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளியீடுகளுடன் வெளிவரும் பட்டியற் தரவுகள் (Cataloguing in Publication Data (CIP)

நாட்டில் உள்ள நூலகங்களில் பட்டிலாக்கம் மற்றும் பகுப்பாக்கத்தில் ஒத்த தன்மையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வெளியீடு ஒன்றின் நூல்விபரத் தகல்களை உள்ளடக்கிய பட்டியலை அந்நூலிலேயே அச்சிடுவது இதன் மூலம் நடைமுறைப் படுத்தப்படுகிறது. அதன்பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் நூலாசிரியர்கள் மற்றும் வெளியீட்டாளர்களுக்கு 232 வெளியீடுகளின் (சிங்களம் 181, தமிழ் 17 மற்றும் ஆங்கிலம் 34) வெளியீடுகளுடன் வெளிவரும் பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கணனிப் பட்டியலாக்கத்தின் பொருட்டு MARC 21 படிவங்களின் மூலம் பட்டியலாக்கத் தரவுகள்பற்றிய பொதுவான கொள்ளை விளக்கம் ஒன்றைத் தயாரித்தல்

கணனிப் பட்டியலாக்கத்தின் பொருட்டு MARC 21படிவத்தின் மூலம் இலங்கைக்குப் பொருத்தமான விதத்தில் பொதுவானதொரு படிவத்தைத் தயாரிப்பதற்காக 05 குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன்பிரகாரம் தயாரிக்கப்பட்ட MARC 21 படிவத்திற்கு ஏற்ப நூலொன்றின் பட்டியலாக்கத் தகவல்களை உள்ளீடு செய்வதற்குத் தேவையான விபரங்களுடன் கூடிய நூற்பட்டியல் அமைப்பொன்று தேசிய நூலகத்தின் வெப் தளத்தில் உட்புகுத்தப்பட்டுள்ளது.

கணனிமயப்படுத்தப்பட்ட பட்டியலாக்கத்தின் பொருட்டு MARC 21 படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விபரங்களுடன் கூடிய நூற்பட்டியல் அமைப்புத் தொடர்பாக நூலகர்களை அறிவூட்டும் ஒன்லைன் மாநாடு ஒன்று 2020.12.18 ஆம் திகதி நடத்தப்பட்டது. இம் மாநாட்டின் வளவாளர்களாக திரு / திருமதி கலாநிதி றுவன் கமகே, கலாநிதி பிரியங்வதா வணிகசூரிய, நிமல் ஹெட்டியாரர்சி, ஹர்ஷா பாலசூரிய, வருணி கங்கபட ஆராச்சி போன்றவர்கள் செயற்பட்டதுடன் அம்மாநாட்டின் பொருட்டு நூலகத் துறையைப் பிரதிநிதிதுவப் படுத்திய சுமார் 70 பேர் பங்குபற்றியிருந்தனர்.

பேணல் மற்றும் புதுப்பித்தமைத்தற் பிரிவு

தேசிய நூலகத்தின் நூற் சேகரிப்பில் உள்ள நூலக சாதனங்களைப் பேணிப் பாதுகாத்தலுடன் நாட்டின் ஏனைய நூலகங்களில் உள்ள நூலகச் சேகரிப்புக்களை பாதுகாப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதும் இப் பிரிவின் பொறுப்பாகும். இதன் கீழ் தேசிய நூலகத்தின் சேகரிப்பை பேணிப் பாதுகாப்பதன் பொருட்டு நிதமும் அவற்றை சுத்தம் செய்தல், புகையூட்டுதல், நூல் மட்டை கட்டுதல், திருத்தியமைத்தல் போன்ற செயற்பாடுகளுடன், தேசிய நூலகச் சேகரிப்பு உள்ள பிரதேசத்தின் காற்றுக் கட்டுப்பாடு, ஈரப்பதநிலையை அளக்கும் கருவியின் மூலம் ஈரப்பதநிலையை (humidity) கட்டுப்படுத்தும் செயற்பாடுகளும் இப்பிரிவினால் நடைமுறைப் படுத்தப்படுகின்றன . அதற்கும் மேலால் தேசிய மட்டத்திலான நூலக பேணற் செயற்பாடுகளின் பொருட்டு தேவையான ஆலோசனைகளை வழங்கிப் பங்களிப்புச் செய்கிறது. சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் உலகின் ஞாபகத்தைப் பாதுகாக்கும் யெற்திட்டம் (MOW) மற்றும் தொட்டுணரமுடியாத உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்திட்டம் (ICH) என்பன இப்பிரிவின் கீழ் செயற்படுகின்றன.

நூல் மட்டை கட்டும் கூடம்

தேசிய நூலகத்தின் நூல்களை பாதுகாத்து, மட்டைகட்டுதல் நூல் மட்டைகட்டும் பிரிவின் முக்கிய பொறுப்பாகும். இதன் பிரகாரம் நூல் மட்டைகட்டும் பிரிவினால் 2020 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- தேசிய சேகரிப்பைச் சேர்ந்த 513 புத்தகங்களுக்கும் 05 வர்த்தமானிகளும் மட்டை கட்டப்பட்டுள்ளது
- பண்டாரகம சோமா ஜயகொடி மாதிரி நூலகத்தின் 322 நூல்கள் மட்டை கட்டப்பட்டன.
- 34 திறந்த துண்டுப் பிரசுரப் பெட்டிகளும் 238 மூடிய பெட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.
- பல்வேறு பிரிவுகளின் தேவைக்கு ஏற்ப அவற்றின் ஏடுகள் மற்றும் நூல்கள் மட்டை கட்டப்பட்டன.

தேசிய நூலக சேகரிப்பைப் பேணி நன்கு நடைமுறைப்படுத்திச் செல்தல்

தேசிய நூலகச் சேகரிப்பை பேணுவதற்காக நிதமும் அவற்றைச் சுத்தம் செய்தல், திருத்தியமைத்தல் போன்ற செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. தேவையான சந்தர்ப்பங்களில் தேசிய நூலகத்தில் பேணல் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

புகையூட்டல்

தேசிய நூலகத்தின் நூல்களைப் பேணும் பிரதான வழிகளில் ஒன்றாக அவற்றிக்குப் புகையூட்டுதல் நடைபெற்று வருகின்றது. இவ்வருடத்தில் தேசிய சேகரிப்பின் 513 நூல்களுக்கும் 05 வர்த்தமானி களுக்கும் தைமோல் புகையூட்டப்பட்டதுடன் இலங்கைச் சேகரிப்பில் பூச்சிகளால் பாதிப்படைந்த நூல்களுக்கு பொஸ்பீன் புகையூட்டப்பட்டதுடன் தேசத்தின் பெறுமதியான நூற் செயற்திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட நூல்களை பூச்சிகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக பொஸ்பீன் புகையூட்டப்பட்டதுடன், நூலீட்டற் பிரிவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட தனியார் நூற் சேகரிப்புக்களுக்குப் புகையூட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆவணங்களைப் புதுப்பித்தமைக்கும் செயற்பாடு

இதன் கீழ் தேசிய நூலகச் சேகரிப்பைச் சேர்ந்த 14 நூல்களின் 2423 பக்கங்களுக்கு அமில நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் 2416 பக்கங்களுக்கு ரிசு இடப்பட்டுள்ளது.

உலகின் ஞாபகத்தை பாதுபாத்தல் தொடர்பான செயற்திட்டம் (MOW)

யுனெஸ்கோவின் உலகின் ஞாபகத்தைப் பாதுகாக்கும் செயற்திட்டத்தின் தேசிய மத்திய நிலையமாகச் செயற்படுவது தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை ஆகும். இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் உலகின் ஞாபகத்தைப் பாதுகாத்தல் தொடர்பான இலங்கைக்கே உரித்தான அறிவுசார் துறை தொடர்பாக கல்விமான்களின் அறிக்கைகளைத் தயாரித்து யுனெஸ்கோ அமைப்பின் உலகின் ஞாபகத்தைப் பாதுகாக்கும் செயற்திட்டத்திற்கு (UNESCO Memory of the World) அனுப்பி வைப்பதாகும். இச்செயற்திட்டத்தின் கீழ் இலங்கைக்கே உரிய பழமைவாய்ந்த ஆவணமாகக் கருதப்படும் மஹாவம்ச ஓலைச்சுவடிகள் தொடர்பாக அறிஞர்களின் அறிக்கையைத் தயாரித்து அதை யுனெஸ்கோவின் உலகின் ஞாபகத்தைப் பாதுகாக்கும் செயற்திட்டத்தில் சேர்த்துக்கொள்வது தொடர்பாக கவனத்தில் கொள்வதற்காக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தைத் தயாரிப்பதற்கு இது தொடர்பான விடய ஞானம் உள்ள கலாநிதி திரு. நிலான் குரே யின் உதவி பெறப்பட்டது.

இந்த யுனெஸ்கோவின் உலகின் ஞாபகத்தைப் பாதுகாக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக தேசிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் , அக் குழு 2020.03.26 திகதி மற்றும் 2020.08.26 ஆம் திகதிகளில் சபையில் கூடியது.

தொட்டுணரமுடியாத கலாசார உரிமைகளைப் பாதுகாக்கும் செயற்திட்டம் (ICH)

இலங்கையில் தொட்டுணரமுடியாத கலாசார உரிமைகளை பேணும் செயற்திட்டத்தின் (Intangible Cultural Heritage) மத்திய நிலையமாக செயற்படுவது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையாகும். இச் செயற்திட்டத்தின் பிரதான நோக்கம் இலங்கையில் உள்ள தொட்டுணரமுடியாத கலாசார உரிமைகள் தொடர்பான அறிவையும் தகவல்களையும் ஒன்று திரட்டுவதன் பொருட்டு, தேசியமட்டத்தில் முக்கியம் வாய்ந்த தகவல்களை யுனெஸ்கோவின் தொட்டுணரமுடியாத கலாசார உரிமைகளுக்கான ஆவணத்தில் உட்புகுத்துவதற்காக விதந்துரைத்தலாகும். அதன் பிரகாரம் இந்த வருடத்தில் இலங்கையின் “தும்பர பதுறு ரட்டா” கலைச் சம்பிரதாயம் தொடர்பாக கல்விமான்களின் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு யுனெஸ்கோ அமைப்பிடம் சமர்ப்பிப்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிவுசார் அறிக்கையைத் தயார் செய்வது தொடர்பாக அது தொடர்பான விசேட அறிவுபெற்ற கல்விமானான பேராசிரியர் திரு. பீ.டீ. நந்ததேவ அவர்களின் உதவி பெறப்பட்டுள்ளது.

இதற்கும் மேலால் இலங்கையின் பாரம்பரிய மீன்பிடி முறையான ரிட்டிபன்ன மீன்பிடித் தொழில் தொடர்பாக அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு யுனெஸ்கோ அமைப்பிடம் சமர்ப்பிப்பது தொடர்பாக புத்தசாசன, கலாசார மற்றும் சமயச் செயற்பாடுகள் அமைச்சுடன் ஆரம்ப கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையில் தொட்டுணரமுடியாத கலாசார உரிமைகளை பேணும் செயற்திட்டத்தின் கீழ் இலங்கை சமூகத்தில் உள்ள புராதன நாட்டார் கதைகளை ஒன்று திரட்டி தேசிய நாட்டார் கதைக் தொகுப்பு என்னும் பெயரில் நூலொன்று உருவாக்கப்பட்டு, அதன் இறுதிப் பதிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றது. இது பற்றிய விபரங்கள் சபையின் இணையப் பக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. **(www.natlib.lk)**

IFLA PAC மத்திய நிலையத்தின் செயற்பாடுகள்

சர்வதேச நூலக சங்கங்களின் சம்மேளனத்தின் ஆதரவுடன் நிறுவப்பட்டுள்ள பேணல் மற்றும் திருத்தியமைத்தல் மத்திய நிறுவனத்தின் (Internatioal Federation of Library Association – Preservation and Concervation) பிராந்திய மத்திய நிலையம் இலங்கைத் தேசிய நூலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இலங்கை முன்னணிப் பிராந்திய நாடுகளின் நூலக சாதனங்கள் தொடர்பாக ஏற்படும் சிக்கல்களை இனங்காண்பதுடன் அதற்கான தீர்வுகளைத் விதந்துரைப்பதும் முக்கிய நோக்கமாகும். இதன் கீழ் நூலக நூல்களுடன் தொடர்புடைய கிருமிநாசினிகள் மற்றும் ஓலைச் சுவடிகளின் பேணல் தொடர்பான அறிக்கை ஒன்றைத் தயாரித்து IFLA நிறுவனத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் நூலக சாதனங்களில் ஏற்டும் பூஞ்சனம் மற்றும் பக்ரீரியாக்களை அழிப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பான விபர அறிக்கையை **IFLA PAC** மத்திய நிலையத்திற்கான சபையின் வெப் பக்கத்தின் மூலம் வெளியிட்டு நூலகர்களை அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நூலக சாதனம் பேணல் மற்றும் புதுப்பித்தமைத்தல் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சிப் பாட நெறிகளை ஒழுங்குசெய்தல்

பயிற்சிப்பாட நெறியின் பெயர்	இடம்	பயிற்சி பெற்றோர்	பங்கு பற்றியோர் எண்ணிக்கை	கால அளவு
நூலக சாதனங்களை பேணுதல் தொடர்பான செயல்முறையிலானதும் கோட்பாட்டு ரீதியிலானதுமான பயிற்சிப் பட்டறை மட்டம் II	தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை	ஆவணங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள்.	15	2020.02.11-12
ஆவணங்கள் பேணல் மற்றும் நூல் மட்டை கட்டுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை	முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனம். திக்வெல்ல, காலி	அலுவலக சேவகர்கள்	30	2020-02-13-14
ஆவணங்கள் பேணல் மற்றும் நூல் மட்டை கட்டுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை	தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை	ஆவணங்களுக்குப் பொறுப்பான அலுவலர்கள் .	16	2020.09.15-16
ஆவணங்கள் பேணல் மற்றும் நூல் மட்டை கட்டுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை	முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவனம் திருகோணமலை	நூலக உதவியாளர்கள்	28	2020.12.22-23

ஓலைச் சுவடிகளைப் பேணுவதற்காக "தும்மல" எண்ணைய் தயாரித்தல்

இவ்வருடத்தில் தேவைக்கேற்ப 17 போத்தல் "தும்மல" எண்ணை தயாரிக்கப்பட்டது. மேலும் விற்பனையின் பொருட்டு பதிவு செய்யப்பட்டுள்ள வியாபாரக் குறியீட்டை "பண்ஹிந்த" என அரச வர்த்தமானி மூலம் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேணற் செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்குவதும் நியமங்களை தொகுத்தலும்

இலங்கை நூலகங்களில் உள்ள நூலக சாதனங்களைப் பேணுவதன் பொருட்டு அது தொடர்பான நியமங்களைத் தொகுப்பதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் தேசிய நூலக அவணவாக்கல் சேவைகள் சபையினால் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதன்கீழ் கீழ்க் காட்டப்பட்டுள்ள விதத்தில் தேவையான மதியுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

- இலங்கைப். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்புத் தொழில்நுட்ப நூலகம் பரிசீலனை செய்யப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

- கொவிட் - 19 போது நூலகங்களைத் திறந்து வைப்பது தொடர்பாக ஆலோசனைக் கோவை யொன்றைத் தயாரிப்பதற்கு பங்களிப்புச் செய்யப்பட்டது. இந்த ஆலோசனைக் கோவையானது Exit strategy from Covuid – 19 for Libraries in Sri Lanka என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைக் கோவையானது கொழும்புப் பல்கலைக் கழகத்தின் நூலக விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் தொடர்பான தேசிய நிறுவனத்தினால் (NILIS) வெளியிடப்பட்டுள்ளது. COVID - 19 தொற்றுக் காலத்தில் COVID - 19 உடன் நூலகச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்திச் செல்வது தொடர்பாக நூலகங்களுக்கான பொது ஆலோசனைக் கோவை ஒன்றைக் காலத்திற்குக் காலம் சுற்று நிருபமாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- ஜனாதிபதியின் அலுவலக நூலகத்தை பரிசீலனை செய்து அங்கு உள்ள நூல்களைப் பேணுவதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதியின் செயலாளர் அலுவலக நூலகத்திற்கு பொஸ்பீன் புகையூட்டுதல் தொடர்பான செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

- ஜோர்ஜ் ஸ்ருவட் நிறுவனத்தின் தலைமையக நூலகத்தை பரிசீலனை செய்து அதைப் பேணுவது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

- சரித்திரப் புகழ்பெற்ற பெந்தோட்டை வனவாசி ரஜ மகா விகாரையில் உள்ள சிறீ பண்டித ரத்ன பிரிவெனாவிற்கு 2020.07.29 ஆந் திகதி சென்று புராதன நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகளை பேணுவது தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டது.

  COVID தொற்றுக் காரணமாக மூடப்பட்டிருந்த பொது நூலகங்களை மீளத் திறக்கும்போது பின்பற்றவேண்டிய ஆலோசனைகள் அடங்கிய போஸ்டர் தயாரிக்கப்பட்டு சமூக ஊடகங்களின் ஊடாக பிரச்சாரம் செய்யப்பட்டது.

நூலக ஆய்வுப் பிரிவு

மாகாண மட்டத்தில் நூலக மதிப்பாய்வுகளை மேற்கொள்ளுதல், நூலகத் துறைசார் செயற்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரங்களை ஒன்று திரட்டுதல், நூலக தகவல் விஞ்ஞானத் துறையில் தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்களின் கீழ் ஆய்வுகளை மேற்கொள்வதும் அத்துடன் அத் தகவல்களை பிரசுரிப்பதும். நூலகச் செயற்பாடுகள் தொடர்பான ஊடகத் தகவல்களை சேகரித்தல் மற்றும் ஆய்வுப் பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல் மற்றும் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்துதல் என்பன இப்பிரிவின் முக்கிய செயற்பாடுகளாகும்.

தேசிய மட்டத்திலான மதிப்பாய்வுகளை நடத்துதல்

இலங்கையில் நூலகத் துறை சார் தேசிய மட்டத்திலான மதிப்பாய்வை நடத்துதல் சபையின் ஆராய்சிப்பிரிவின் முக்கிய பொறுப்பாகும். இதன்கீழ் இலங்கையில் பொது நூலகங்களுடன் தொடர்புடைய வாசகர்களின் வாசிப்புப் பழக்கம் தொடர்பான மதிப்பாய்வின் ஆரம்பச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பதிப்புச் செயற்பாடுகள் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் புள்ளிவிபரப் பீடத்திடம் கையளிக்கப்பட்டதுடன் பதிப்புச் செயற்பாடுகள் நிறைவடைந்ததும் மதிப்பாய்வு அறிக்கை வெளிடப்படும்.

ஆய்வு மாநாடுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்

i. வருடாந்த ஆய்வு மாநாடுகளை ஒழுங்குசெய்தல்.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் வருடாந்தம் ஆய்வு மாநாடுகள் ஒழுங்குபடுத்தப்படுகிறது. இதன் நோக்கம் நூலகத் துறைசார் கல்விமான்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளை வெளிக்கொண்டுவரும் பொருட்டுத் தேவையான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுத்தலாகும். இதன் கீழ் இம்முறை நடத்தப்பட்ட வருடாந்த ஆய்வு மாநாடானது "**ICNATLIB** 2020" என்னும் பெயரில் திட்டமிடப்பட்டிருந்ததுடன், நடைபெற்ற COVID – 19 தொற்று நிலைமையால் இம் மாநாட்டை நடத்த முடியாமல் போனது.

ii. ஆய்வு நுட்பம் தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்

ஆய்வு நுட்பம் தொடர்பான இருநாட் பயிற்சிப் பட்டறைகள் 05ஐ இவ்வருடத்தில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோதும் நடைபெற்ற COVID – 19 தொற்றுக் காரணமாக 02 மாநாடுகளை மட்டுமே ஒழுங்குசெய்ய முடிந்தது.

திகதி	இடம்	பங்குபற்றியோர் எண்ணிக்கை	கிடைத்த வருமானம் (ரூபா)
2020.09.07-08	சபையின் கேட்போர் கூடம்	27	120,000.00
2020.09.24-25	சபையின் கேட்போர் கூடம்	31	147,500.00

ஆய்வுத்துறை மற்றும் தொடர்புடைய வெளியீடுகளை வெளியிடுதல்

i. இலங்கை நூலகங்கள் தொடர்பான புள்ளிவிபர ரீதியிலான கையேடு ஒன்றைத் தயாரித்தல் (***Statistical Hand book on Libraries in Sri Lanka***- 2020)

இலங்கை நூலகங்கள் தொடர்பான தகவல்களை தற்காலப்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு வருடமும் நூலகங்கள் தொடர்பான புள்ளிவிபரக் கையேட்டைத் தொகுப்பதன் மூலம் அதில் உள்ள தகவல்கள் தற்காலப்படுத்தப் படுகின்றன. இதன் கீழ், இலங்கையில் உள்ள சகல பொது நூலகங்கள், பல்கலைக்கழக நூலகங்கள், பாடசாலை, பிரிவேனா, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்திச் செல்லப்படும் நூலகங்கள் தொடர்பான தகவல்களை இந்தக் கையேட்டில் உள்ளடக்கப்படும். அதற்கும் மேலால் இலங்கையில் பொது நூலகங்கள் தொடர்பான தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்:ளும் நோக்கத்துடன் பொது நூலகங்கள் தொடர்பான தரவுத் தளமொன்றை உருவாக்கும் பொருட்டு தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.

ii. நூலகத் துறையில் ஆய்வு தொடர்பான ஒழுக்கக் கோவை **(Ethical Guideline)**

நூலகத் துறையுடன் தொடர்புடைய ஆய்வுகளை மேற்கொள்ளும்போது மாணவர்கள் பின்பற்ற வேண்டிய ஆய்வு தொடர்பான ஒழுக்கக் கோவையை அறிமுகப்படுத்துதலே இதன் நோக்கமாகும். இதன் பொருட்டு ஏனைய நாடுகளில் நடைமுறையில் உள்ள ஒழுக்க விதிகள் மற்றும் இலங்கையில் நடைமுறையில் உள்ள ஒழுக்க விதிகள் தொடர்பாக விசேச ஆய்வொன்றை மேற்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள ஆரம்ப திட்டவரைபை மேலும் ஆராய்ந்து பார்க்கும் பொருட்டு ஆய்வுக்கான மதியுரைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எண்மய நூலக ஒன்றியம்

தேசிய நூலகத்தில் எண்மய நூலகச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் 2016 ஆம் ஆண்டில் இருந்து எண்மய நூலக ஒன்றியம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளதுடன், அது தகவல் தொழில் நுட்பம் மற்றும் வாசகர் சேவைப் பிரிவுகளின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இந்த எண்மய நூலக ஒன்றியத்தின் மூலம் எண்மயமாக்கலின் பொருட்டு தகவல் வளங்களை இனங்காணல், தேசிய எண்மய நூலகத்தின் பொருட்டு தற்பொழுது சேகரிக்கப்பட்டுள்ள தகவல்களை Dspace தரவுத் தளத்தில் உட்புகுத்துதல், இலங்கைத் தேசிய நூலகத்திற்குப் பொருத்தமான எண்மய வெளியீடுகளையும், தகவல்களையும் சேகரித்தல். வாசகர்களுக்கு எண்மயத் தகவல் சேவைகளை வழங்குதல், போன்ற செயற்பாடுகள் இவ் ஒன்றியத்தினால் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

தேசிய எண்மய நூலகத்திற்கான கொள்கை விளக்கமொன்றைத் தயாரித்தல்

இலங்கைத் தேசிய எண்மய நூலகம் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள தேசிய எண்மய நூ லக கொள்கை விளக்கத்தைப் புதுப்பித்தமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எண்மய நூலக ஒன்றியத்தின் ஊடாக ஒன்று திரட்டப்பட்டுள்ள வெளியீடுகள் திறந்த அணுகுமுறையின் கீழ் (Open Access Policy) வாசகர்களுக்கு வழங்குவதற்கு திறந்த அணுகுமுறைக்கான கொள்கை விளக்கமொன்றைத் தயாரித்து நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலகச் சேகரிப்பை எண்மயப்படுத்துதல்

தேசிய நூலகத்தின் பழைய வர்த்தமானிச் சேகரிப்பில் 1950 ஆம் ஆண்டில் இருந்து 1957 ஆம் ஆண்டுவரை வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானிகளின் எண்மயமாக்கப்பட்ட தகவல்கள் DSpace தரவுத் தளத்தில் உட்புகுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கும் மேலால் 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட 8187 அரச வர்த்தமானிகளின் தரவிறக்கம் செய்யப்பட்டு 3050 தரவுகள் DSpace தரவுத் தளத்தில் உட்புகுத்தப்பட்டுள்ளன.

ஏனையவை

இலங்கைத் தேசிய நூலகத்தினால் வெளியிடப்பட்ட வெளியீடுகளை, தேசிய எண்மய நூலகத்தின் மூலம் பிரவேசிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனூடாக தேசிய வாசிப்பு மாதம் 2020 செயற்திட்டத்திற்குரிய சுற்று நிருபம், காணாமல்போன நூலக சாதனங்கள் தொடர்பான சுற்றுநிருபம், எண்மய நூலகக் கொள்கை விளக்கம் மற்றும் எண்மய நூலகத்திற்கான திறந்த அணுகுமுறை கொள்கை விளக்கம் உள்ளடங்கலாகத் தேசிய நூற்பட்டியலில் இதுவரை வெளியிடப்பட்ட வெளியீடுகளுக்கு பிரவேசிப்பதற்கான வசதிகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கும் மேலால் GARI (Global Academic Research Institute) நிறுவனத்துடன் ஆய்வுக் கட்டுரைகளைப் பெறுவது தொடர்பாக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல ICTA நிறுவனத்துடன் “cloud” வசதிகளைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விரிவாக்கற் சேவைப் பிரிவு

இப் பிரிவின் மூலம் நாட்டினுள் பரவி உள்ள பல்வேறுபட்ட நூலகங்களின் அபிவிருத்தியின் பொருட்டு உதவிகளை வழங்குதல், மதியுரைச் சேவைகளை வழங்குதல், வாசிப்பு பழக்கத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு நூலகர்களைத் தைரியப்படுத்தல்,“ தேசிய வாசிப்பு மாத” செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல், கஷ்டப் பிரதேசம் மற்றும் கிராமியப் பிரதேசங்களைச் சேர்ந்த நூலகங்களின் பொருட்டு நூல் அன்பளிப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் நூலகங்களை அபிவிருத்தி செய்தல், நூலகத்துறை தொடர்பான விசேட தினங்களைக் கொண்டாடுதல், நூலகங்களுக்குப் பொருத்தமான நூல்களை சிபாரிசு செய்தல், எண்மய நூலக அபிவிருத்திச் செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்தல் போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

தேசிய வாசிப்பு மாதச் செயற்திட்டம்

வாசகர் சமூகத்தினிடையே நூல் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2004 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு வருடமும் வரும் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதம் எனப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இந்த வருடம் தேசிய வாசிப்பு மாதத்தின் ஆரம்ப நிகழ்வாக கௌரவ ஜனாதிபதி அவர்களின் தலைமையின் கீழ் 2020.10.01 ஆம் திகதி ஜனாதிபதியின் அலுவலகத்தில் இலங்கையில் உள்ள 05 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாடசாலைகளுக்கு நூலக வசதிகளுடன் கூடிய பஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இப் பஸ் வண்டிகள் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் இருந்த பாவனைக்கு உதாவது எனக் கைவிடப்பட்ட பஸ் வண்டிகளா வதுடன், இவ் விசேட செயற் திட்டத்தின் பொருட்டு அவை புதுப்பித்தமைத்துத் தரப்பட்டுள்ளன.

பஸ்வண்டிகளின் மூலம் எதிர்காலத்திற்கான பஸ் வண்டி நூலகம் எனப் பெயரிடப்பட்டுள்ள இச் செயற்திட்டததிற்கு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையுடன், தெரண செய்தி வலையமைப்பும், இலங்கைப் போக்குவரத்துச் சபையும், இலங்கை ரெலிகொம் நிறுவனமும் அநுசரணை வழங்கியுள்ளார்கள்.

இப் பஸ்வண்டிகளுக்கும் மேலால் தொடர்புள்ள சகல பாடசாலைகளுக்கும் பஸ் வண்டி நூலகத்திற்குத் தேவையான நூலக சாதனங்கள் உள்ளடங்கலாக இணைய வசதிகளுடன் கூடிய ரப் இயந்திரமும் அதேபோல தொலைக்காட்சி இயதிரமும் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த வருடத்தில் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட பஸ் வண்டி நூலகம் தொடர்பான விபரங்கள் கீழே கட்டப் பட்டுள்ளவாறாகும்.

தொடர் இலக்கம்	பாடசாலையின் பெயர்	மாவட்டம்	அன்பளிப்பு வழங்கிய திகதி
01	தொளஸ்பாகே சிங்கள மஹா வித்தியாலயம்	கண்டி	2020.10.05
02	காலி பிலான வித்தியார்த்தோதய வித்தியாலயம்	காலி	2020.10.07
03	லுனுவில மத்திய மஹா வித்தியாலயம்	புத்தளம்	2020.10.09
04	குருவிட்ட விஜய குமாரதுங்க வித்தியாலயம்	இரத்தினபுரி	2020.10.13
05	கிளிநொச்சி தர்ம புரம் இல 1 தமிழ் வித்தியாலயம்	கிளிநொச்சி	2020.10.21

தேசிய வாசிப்பு மாதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஏனைய செயற்திட்டங்கள்

- இம்முறை தேசிய வாசிப்பு மாதத்தின் கருப்பொருள் நூல்களை வாசிப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன், 2020 மார்ச் மாத இறுதியிலிருந்து தாக்கத்தை ஏற்படுத்திய COVI-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டிருந்த பல செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாமல் போனது. அப்படி இருந்த போதும் தேசிய வாசிப்பு மாதம் தொடர்பாக அதனுடன் தொடர்புடைய மதியுரைகளுடன் கூடிய சுற்று நிருபமொன்றை சகல நூலகங்களுக்கும் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதுடன், பெயரிடப்பட்ட கருப்பொருளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட போஸ்டர்களின் மாதிரிகளை சமூக ஊடகங்களினூடாக நூலகங்களுக்கு தொடர்புபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேசிய வாசிப்பு மாதத்துடன் தொடர்புடைய பிரதேச செயற்திட்டங்களாக 2020 மார்ச் மாதம் 11 ஆம் திகதி அநுராதபுர மாவட்டத்தில் உள்ள கெப்பித்திக்கொல்லாவ கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் பொருட்டும், 2020 மார்ச் 12 ஆம் திகதி அநுராதபுரம் பொது நூலகத்திலும் வாசகர் சமூகத்தின் பொருட்டு வாசிப்பு மையம் நடத்தப்பட்டது

தேசிய நூலகத்தின் நூல் விற்பனைக் கூடத்தை நடைமுறைப்படுத்திச் செல்தல்

தேசிய நூலகக் கட்டிடத்தின் கீழ்த் தளத்தில் தேசிய நூலகத்தின் நூல் விற்பனைக் கூடமொன்று நடைமுறைப்படுத்திச் செல்லப்படுவதுடன் இதற்கான அடிப்படைக் காரணம் மலிவு விலையில் நூல்கள் உட்பட நூலக எழுது கருவிகளையும் நூலகத்திற்குத் தேவையான ஏனைய உபகரணங்களையும் விற்பனை செய்தலாகும். விற்பனையின் பின் பணம் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் சபையினால் வெளியிடப்படும் வெளியீடுகளை விற்பனை செய்தற்காக வெளிக்கள நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் சாகித்திய மாதத்தின் பொருட்டு விசேட கழிவுடன் சபையின் நூல் விற்பனைக் கூடத்தினூடாக நூல்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வருடம் நூல் விற்பனைக் கூடத்தில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா. 1,044,438.75 ஆகும்.

நூற் கண்காட்சிகளை நடத்துதல்.

வருடம் முழுவதும் நடைபெற்ற COVID -19 தொற்று நோய் காரணமாக நாடு முழுவதும் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நூற் கண்காட்சிகளை நடத்தமுடியாமல் போனதுடன் இலங்கை நூல் வெளியீட்டாளர் சங்கத்தினால் வருடந்தோறும் ஒழுங்கு செய்யப்படும் கொழும்பு சர்வதேச நூற்கண்காட்சி 2020.09.18 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதிவரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடத்தப்பட்டதுடன் இந் நூற் கண்காட்சியில் சபையின் விற்பனைக் கூடம் ஒன்றும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

நூல் அன்பளிப்பு வழங்கும் செயற்திட்டம்

நாட்டில் உள்ள நூலகங்களின் சேகரிப்பை அபிவிருத்தி செய்யும் வழிகளில் ஒன்றாக நூலகங்களுக்கு நூல் அன்பளிப்புச் செய்யும் செயற்திட்டம் ஒன்று தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் பல நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

நிறுவனம்	நிறுவனங்களின் எண்ணிக்கை	நூற் தொகை	பெறுமதி (ரூபா)
பாடசாலை நூலகம்	63	3776	711,751.76
பொது நூலகம்	03	141	30,288.75
தஹம் பாடசாலை நூலகம்	18	2150	469,727.30
அமைச்சு நூலகம்	03	328	70,177.50
பாதுகாப்புப் பிரிவு நூலகம்	01	38	9,995.75
ஏனைய நூலகம்	17	2340	473,139.50
மொத்தம்	105	8773	1,765,080.56

இதற்கும் மேலால் நூல்களை விதந்துரைக்கும் செயற்திட்டத்தின் கீழ் சபைக்குக் கிடைத்த பிரதிகளில் 244 நூல்கள் சோமா ஜயகொடி மாதிரி நூலவகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வீட்டு நூலகங்களைப் பதிவுசெய்தல்

இந்நாட்டில் நடைமுறையில் உள்ள முக்கிய நூலகங்களுக்கு மேலால் வீட்டு மட்டத்திலும் மற்றும் பிற சிறுபிரமான சங்கங்கள் மற்றும் தாபனங்கனுடள் இணைந்து செயற்பட்டுவரும் நூலகங்களை இனங்கண்டு அவற்றைப் பதிவுசெய்யும் செயற்திட்டமொன்றும் சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நூலகங்களுக்கு மதியுரை சேவைகளை வழங்குதல்

நாட்டில் உள்ள பல்வேறு நூலகங்களுக்கு பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் தேவைப்படும் மதியுரைகளை வழங்குவது சபையின் பிரதான பொறுப்புக்களில் ஒன்றாகும். இதன் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நூலகங்களுக்கு இவ்வருடத்தில் மதியுரை சேவைகள் வழங்கப்பட்டன.

நூலகத்தின் பெயர்	வழங்கப்பட்ட சேவை
பதியத்தலாவ பிரதேச சபையின் பதியத்தலாவ பொது நூலகம்	புதிய கட்டிடம் கட்டுவது தொடர்பாக மதியுரை வழங்கப்பட்டது
களுத்துறை பிரதேச சபைக்குரிய சுபூதி பொது நூலகம்	கட்டிடத்தை புணரமைப்பு செய்வது தொடர்பாக தேவையான மதியுரை வழங்கப்பட்டது
சிலா / நாத் வித்தியாரத்ன மஹ பிரிவேன நூலகம்	மறுசீரமைப்புச் செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்தல்
கொழும்பு தேசிய வைத்தியசாலை நூலகம்	வைத்தியசாலை நூலகம் மதிப்பாய்வு செய்யப்பட்டு தேவையான மதியுரைகள் வழங்கப்பட்டன.
அம்பலாங்கொட தர்மாசோக்க வித்தியாலய நூலகம்	கட்டிடம் மேற்பார்வை செய்யப்பட்டு தேவையான மதியுரைகள் வழங்கப்பட்டன.

கிராமிய நூலக அபிவிருத்திச் செயற்திட்டம்

இலங்கையில் கஷ்டப் பிரதேசங்கள் மற்றும் கிராமப் பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளுடன் நடைமுறைப்படுத்திச் செல்லப்படும் நூலகங்களை அபிவிருத்தி செய்வதே இச் செயற்த்திட்டத்தின் நோக்கமாகும். இதன் கீழ் நூலகக் கட்டிடங்களைத் திருத்தியமைத்தல், நூலக சாதனங்கள் மற்றும் மரத் தளபாடங்களைப் பெற்றுக் கொடுத்தல், ஊழியர்களைப் பயிற்றுவித்தல் போன்றவை

சபையின் உதவியுடன் நடைபெற்றன. இச் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட மஸ்கெலிய பொது நூலகம் 2020.01.31 திகதி திறந்து வைக்கப்பட்டதுடன், அதற்குத் தேவையான நூல்களும் உபகரணங் களும் சபையினால் வழங்கப்பட்டதுடன், கட்டிடத்தைப் புதுப்பித்தமைக்கும் செயற்பாடானது மஸ்கெலியா பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட குருணாகல் மாவட்டத்தில் உள்ள அஹெட்டுவெவ பொது நூலகத்திற்கு சபையினால் நூல்களும் மரத் தளபாடங்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. கிராமிய நூலக அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்திருந்த புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த கறுவெலகஸ்வெவ பொது நூலகம் மற்றும் மொணராகலை மாவட்டத்தைச் சேர்ந்த மடுள்ள பிரதேச சபையின் கீழ் புதிதாக நிர்மானிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த பொது நூலகம் தொடர்பாக ஆரம்ப மதிப்பாய்வு செய்யற்பாடுகள் இவ்வருடத்தில் நிறைவேற்றப்பட்டன.

நூலகங்களுக்கு நூல்களை விதந்துரைக்கும் செயற்திட்டம்.

நூலகங்களுக்கு வாசகர்களின் பாவனையின் பொருட்டு பொருத்தமான நூல்களை விதந்துரைப்பதே இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் வாசகர்கள் வாசிப்பதற்குப் பொருத்தமான நூல்கள் தொடர்பான வழிகாட்டுதல் கிடைக்கப் பெறுவதுடன் இவ்வருடத்தில் 67 நூல்களுக்கு விதந்துரை வழங்கப்பட்டுள்ளது. இதன்கீழ் வெளியீட்டு உதவிச் செயற்திட்டத்தின் கீழ் அனுமதி பெற்றிருந்து 52 நூல்கள் விதந்துரைக்கப்பட்டன. 2019 -2020 வருடத்தில் நூலகங்களுக்கு பொருத்தமான நூல்களாக விதந்துரைக்கப்பட்ட நூல்களின் பட்டியல் கல்வி அமைச்சிடம் கொடுக்கப் பட்டுள்ளதுடன், இவ்விதம் விதந்துரைக்கப்பட்ட நூல்கள் தொடர்பாக தேவையான பிரச்சாரச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எண்மய நூலகச் செயற்திட்டம்

இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களையும்உள்ளடக்கும் விதத்தில் மாதிரி எண்மய நூலகங்கள் 25 அமைப்பதன் பொருட்டு தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையும் தொடர்பாடல் தொழில் நுட்ப பிரதிநிதித்துவப் படுத்தும் நிறுவனமும் (ICTA) இணைந்து இச் செயற்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்செயற் திட்டத்தின் முன்னோடித் திட்டமாக கொழும்பு, குருணாகல், மட்டக்களப்பு, பொலன்நறுவை, பதுளைப் பொது நூலகங்களுக்கு மேலால் புத்தளம் மாவட்டத்தில் கிரிமட்டியான பொது நூலகம், இரத்தினபுரி மாவட்டத்தில் ஓபநாயக்க பொது நூலகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ் நூலகம் ஒன்றிற்காக கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட உபகரணங்கள்	அளவு
கணினி	10
லப்ரொப் கணனி	01
ரப் யந்திரம்	15
போட்டோக் கொப்பி இயந்திரம்	02
பார்கோட் வாசிக்கும் இயந்திரம்	02
ஸ்ரிக்கர் அச்சிடும் இயந்திரம்	02
ஸ்ரிக்கர் சுருள்	72
கதிரைகள் (சிறுவர்)	16
மேசை (சிறுவர்கள்)	04
சோபா செட்	01
கணனி மேசை	08
கணனி கதிரை	09

இதற்கும் மேலால் தெரிவு செய்யப்பட்ட நூலகங்களுக்கு வலையமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இச் செயற்திட்டத்தின் மூலம் நூலகமொன்றிற்கு செலவாகும் பணம் சுமார் 5 மில்லியன் ரூபாவாகும். இதற்கான முன்னேற்பாடானது இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் நிறுவனமான (ICTA) மூலம் வழங்கப்பட்டது.

இச் செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டச் செயற்பாடுகள் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பொருத்தமான நூலகங்களை தெரிவுசெய்தல் மற்றும் தேவையான பயிற்சி வசதிகளை வழங்குதல் போன்றன சபையினால் நடத்தப்படுகிறது.

விசேட தினங்களைக் கொண்டாடுதல்

- சர்வதேச தாய்மொழித் தினம் 2020.02.24 ஆம் திகதி சபையின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டதுடன், அதன் பொருட்டு பேராசிரியர் சந்தகோமி கோப்பறஹேவா மற்றும் திரு. திலகரத்ன குருவிட்ட பண்டார ஆகியோரால் விரிவுரை நிகழ்த்தப்பட்டது. அந் நிகழ்ச்சியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.
- ஒவ்வொரு வருடமும் யூலை மாதத்தில் நடைபெறும் பொது நூலக தினத்தின் பொருட்டு இந்த வருடத்திலும் பொது நூலகத் தினத்தைக் கொண்டாட விசேட விரிவுரை ஒன்று ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. இம்முறை COVID -19 காலத்தில் நூலகங்களைத் திறந்துவைப்பது எவ்விதம்? என்னும் தலைப்பின் கீழ் 2020.07.07 ஆம் திகதி Zoom தொழில் நுட்பத்தினூடாக சபையின் உதவிப் பணிப்பாளர் திரு. ஊதய கப்பிராலினால் விரிவுரை நடத்தப்பட்டது..

ஏனையவை

நடைபெற்ற COVID-19 தொற்று நோய்ச் சூழலில் COVID – 19 நோய்க் காவிகளை இனங்காண்பதற்காக ICTA நிறுவனம் அறிமுகப்படுத்திய கோவிட் கண்டுபிடிக்கும் செயற்திட்டத்தை மாகாண ஆணையாளர்களினூடாக பொது நூலகங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் முக்கிய பொறுப்பு ஏற்கனவே சேவையில் உள்ள நூலகர்களுக்கு குறுங்கால பயிற்சிப் பாட நெறிகளை நடத்துவதன் மூலம் அவர்களுக்கு பரந்தளவிலான தொழிற் பயிற்சிகளை பெற்றுக் கொடுத்தலாகும். இதன் கீழ் பொது, பாடசாலை, பிரிவெனா, போன்ற பல்வேறு வகையான நூலகங்களைச் சேர்ந்த நூலகர்களின் பொருட்டு குறுங்கால பயிற்சிப் பாடநெறிகள் ஒழுங்கு படுத்தப்படுகின்றன. இதற்கும் மேலால் நூலகத் துறையின் நவீன போக்குப் பற்றி நூலகர்களுக்கும் பல்வேறு தொழில் சார்ந்தோருக்கும் அறியத்தருவதாகும்.

பாடசாலை நூலக ஊழியர்களுக்கான செயற்திட்டங்களை ஒழுங்கு செய்தல்

2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் வாசிப்பு மற்றும் அதை அனுபவிக்கும் திறனை அபிவிருத்தி செய்வது தொடர்பாக பாடசாலை ஆசிரியர்களின் திறனை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டத்தை கல்வி அமைச்சிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாடசாலை நூலகங்களின் பொருட்டு பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன.

- கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பொருட்டு சித்துவில்லென் பன்ஹிந்தட்ட செயற்திட்டத்திற்கான முயற்சியின் கீழ் நூலாக்கம் மற்றும் கவி ஆக்கம் தொடர்பாக விரிவுரையொன்று 20020.01.30 ஆம் திகதி நடத்தப்பட்டது.
- மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் 2020.02.20 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட நூலக வரைவிலக்கணத்தை உருவாக்கும் பயிற்சிப் பட்டறைக்கு வளவாளர்கள் பெற்றுக்கொடுக்கப் பட்டனர்.
- வவுனியா வடக்கு மற்றுத் தெற்கு கல்வி வலய பாடசாலைகளின் நூலகர்களைப் பயிற்று விக்கும் பயிற்சிப் பட்டறை ஒன்று 2020.11.10-11 ஆம் திகதிகளில் வவுனியா காமினி மஹா வித்தியாலயத்திலும், அதேநேரம் தமிழ் மொழிமூலப் பயிற்சிப் பட்டறை ஒன்று வவுனியா வடக்கு கோட்டக் கல்வி அலுவலகத்திலும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தபோதும் COVID – 19 தொற்றுக் காரணமாக நடத்தமுடியாமல் போயுள்ளது.

பொது நூலக ஊழியர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகளை ஒழுங்குசெய்தல்

பொது நூலகங்களின் சேவைத் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஊழியர் குழாத்தின் அங்கத்தவர்களைப் பயிற்றுவித்தலானது, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச சபை மட்டத்தில் நடத்தப்படும். இதன் பொருட்டு உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவியுடன் தொடர்புடைய பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படும் .

- வென்னப்புவ பிரதேச சபையின் கிரிமட்டியான பொது நூலகத்தின் தன்னியக்கமாக்கல் வேலையை கண்காணிப்பதற்காக 2020.02.05 ஆம் திகதி சபையின் ஊழியர்கள் சென்றிருந்தனர்.

- வென்னப்புவ மற்றும் வலிகேபொல பிரதேச சபைகளின் பொது நூலகங்களின் பொருட்டு அவற்றை தன்னியக்கமாக்குவதற்கான பயிற்சிப் பட்டறை ஒன்று 2020.02.17 மற்றும் 18 ஆம் திகதிகளில் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையில் நடத்தப்பட்டது. இதில் நூலகர்கள் உட்பட 15 அலுவலர்கள் பங்குபற்றினர்.

- 2030 திடமான பொது நூலக அபிவிருத்திப் பயிற்சிச் செயற்திட்டத்தின் அடுத்த செயற்திட்டம் புத்தளம் மாவட்டத்தின் பொது நூலக ஊழியர்களின் பொருட்டு 2020.08.31, 2020.09.01 மற்றும் 02ம் திகதிகளில் புத்தளம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. இச் செயற் திட்டமானது சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களில் நடத்தப்பட்டதுடன் சிங்கள மொழிமூலப் பயிற்சி நெறியில் 53 பயிலுநர்களும் தமிழ் மொழிமூலப் பயிற்சி நெறியில் 09 பயிலுநர்களும் பங்குபற்றினர். இக் குறிப்பிடப்பட்ட செயற்திட்டங்களுடன் இணைந்து 2020.09.01 ஆம் திகதி நூல் மட்டை கட்டுதல் மற்றும் பேணல் தொடர்பான செயற்திட்டம் ஒன்று புத்தளம் பொது நூலகத்தில் நடத்தப்பட்டது. அதே போல பொது நூலக ஊழியர்களின் பொருட்டு Microsoft 365 மென்பாண்டங்களைப் அறிமுகம் செய்துவைக்கும் செயற்பாடும் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரகாரம் புத்தளம் மாவட்ட பொது நூலகத்திற்கு இலத்திரனியற் தபால் மற்றும் “கடவுச் சொல்லைப் “ பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பிரிவென் நூலகம் மற்றும் பிற சமய மத்திய நிலையங்களின் நூலக ஊழியர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குசெய்தல்.

- கொழும்பு மாவட்டத்தில் இஸ்லாமிய பாடசாலை நூலகங்களின் ஊழியர்களின் பொருட்டு பயிற்சிப் பட்டறை ஒன்று 2020.03.23 மற்றும் 24 ஆம் திகதிகளில் பேருவளை நளீமியா அரபிக் கல்லூரியில் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு இருந்த போதும் COVID தொற்றுக் காரணமாக நடத்தமுடியாமல் போயுள்ளது. பெந்தோட்டை வனவாசி ரஜ மஹா விகாரை உள்ளடலங்காக ஐந்து ரஜ மகா விகாரைகளின் ஓலைச்சுவடிகள் மற்றும் பழைய கையெழுத்துப் பிரதிகளின் பேணல் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு 2020.07.28 ஆம் திகதி சபையின் தலைவர் உட்பட ஊழியர்களும் பங்குபற்றினர்

பிற நூலக ஊழியர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள்

- பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் மாகாணசபை அமைச்சின் வேண்டுகோளின் பேரில் இலங்கை நூலக சேவையில் உள்ள அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கான பயிற்சி மொடியூல் (மாதிரி) தயாரிக்கப்பட்டு சமர்பிக்கப் பட்டுள்ளதுடன் தொடர்புடைய தொடர்புபடுத்தற் செயற்பாடுகளை நடைமுறைப் படுததுவதற்கு பங்களிப்பு வழங்கப்பட்டது.

தேசிய நூலக விரிவுரைத் தொடர்

தேசிய நூலக விரிவுரைத் தொடரின் 264 ஆவது விரிவுரை 2020.03.26 ஆம் திகதி மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பக் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. லொசந்தக்க ரணதுங்க மற்றும் களனிப் பல்கலைக்கழக தொழில் நுட்ப முகாமைத்துவப் பிரிவின் விரிவுரையாளர் கலாநிதி திரு. சத்துர ராஜபக்ஷ வினால்

தொழில் நுட்பப் புரட்சி மற்றும் தரவு புரட்சி மறுசீரமைப்பு என்னும் தலைப்பின் கீழ் விரிவுரையாற்றத் திட்டமிடப்பட்டு இருந்தபோதும் COVID -19 தொற்றுக் காரணமாக ஒன்று கூடுதல் சாத்தியமற்றுப் போனது.

நூலக மென்பாண்டங்கள் தொடர்பான தொழில் நுட்பச் சேவைப் பயிற்சிப் பட்டறை ஒன்றை ஒழுங்குசெய்தல் (தகவல் தொழில் நுட்பப் பரிவுடன் இணைந்து)

☐ ஹெக்டர் கொப்பேகடுவ விவசாயச் செயற்பாடுகள், ஆய்வு மற்றும் பயிற்சி நிலையத்தில் (HARTI) 2020.02.27 ஆம் திகதி நடத்தப்பட்ட மாகாண சபைகள் தொடர்பான தேசிய நிறுவனத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இலங்கை உள்ளுராட்சி ஆணையாளர்களின் காலாண்டிற்கான தேசிய அபிவிருத்தி மதிப்பாய்வு

கூட்டத்திற்கு தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரிவுத் தலைவர் ஆகியோர் பங்குபற்றியதுடன் அங்கு உள்ளுராட்சி நிறுவனத்தை வலையமைபிற்குள் கொண்டுவருதல் மற்றும் நூலகங்களைத் தன்னியமாக்குதல் தொடர்பாக அறிவூட்டப்பட்டது.

சபை ஊழியர்களைப் பயிற்றுவித்தல்

சபையின் அலுவலர்கள் தமது அலுவலகப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில் சார் அறிவை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் அவர்களைப் பல்வேறு பயிற்சிப் பாடநெறிகளில் ஈடுபடுத்துவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சபை ஊழியர்களைப் பயிற்றுவிக்கும்போது பின்பற்றப்படும் ஊழியர் பயிற்சி அபிவிருத்திக் கொள்கை விளக்கம் ஒன்றைத் தயாரித்து பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக சபையின் ஊழியர்களுக்கு அறியத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

☐ சபையின் சிரேஷ்ட அலுவலர்களின் பொருட்டு பிறர்பணி தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று 2021.01.29 ஆம் திகதி நடத்தப்பட்டுள்ளதுடன் அதன் பொருட்டு இலங்கை பொலிஸ் “விசேச கார்ய பலகாயவின்” கணக்காளர் திரு. லசந்த கமகே வளவாளராக செயற்பட்டார்.

Skills online Sri Lanka செயற்திட்டம்

உலகம் முழுவதும் பரவிய COVID -19 தொற்றின் மத்தியில் அனேகமானோருக்கு தொழில் இல்லாமற்போன காரணத்தால் அவர்களுக்கு புதிய திறன்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் பொதுநலவாய நாடுகளின் கற்கைச் சங்கம் (Commonwealth of learning-Canada) மூலம் பணம் அறவிடப்படாமல் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாட நெறிகளைப் பின்பற்றுவதற்காக சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடன் **Skills online Sri Lanka** செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் இணைந்து சுமார் 3500 குறுங்காலப் பாடநெறிகளைப் பின்பற்றுவதற்கான சந்தர்ப்பம் உள்ளது. இச் செயற்திட்டத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்தும் தேசிய நிறுவனமாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சகல பாடநெறிகளையும் இணையவழி (Online) மூலம் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இப் பாடநெறி தொடர்பான ஆரம்ப அறிவூட்டும் செயற்பாடு, ஏனைய இணைப்புச் செயற்பாடுகள் மற்றும் அதைச் செயற்படுத்துதல் போன்றன கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் பொறுப்பில் உள்ளதுடன், இதன் தேசிய இணைப்பாளராக கலாநிதி செல்வி பிரமிளா கமகே செயலாற்றுவார். இச் செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தின்போது பாட நெறியைப் பின்பற்றுதல் தொடர்பான பொதுநலவாய நாடுகளுக்கிடையே இலங்கைக்கு முதல் இடம் கிடைப்பதற்கு சாத்தியமாகி உள்ளது. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2000 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவது தொடர்பாக அறிவிப்பதற்கான ஊடக சந்திப்பொன்று 2020.08.19 ஆம் திகதி தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதன் இரண்டாம் கட்டம் இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து செயற்பட உள்ளதுடன், இச் செயற்திட்டமானது 2024 மார்ச் 31 ஆம் திகதிவரை செயற்படஉள்ளது.

வெளியீட்டு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவு

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் வெளியீட்டு உதவிச் செயற்திட்டத்தை ஆரம்பித்து அதைக் கொண்டு நடத்துதல், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சகல வெளியீடுகளையும் வெளியிடுதல், சிறப்பு இலக்கிய நூல்களைத் தொகுத்தல், மொழி பெயர்த்தலும் வெளியிடுதலும், வெளியீட்டுப் பிரிவின் முக்கிய செயற்பாடுகளாகும். இதற்கும் மேலால் சர்வதேச நியம இலக்கத் திட்டத்தின் கீழ் ISBN/ISSN/ISMN இலக்கங்களை வழங்குவதும் பல்வேறு மட்டங்களில் எழுத்தாளர் சமூகத்திற்கு வெளியீட்டுச் செயற்பாடு தொடர்பாக மதியுரைகளும் உதவிகளும் வெளியீடு மற்றும் நூல் அபிவிருத்திப் பிரிவினால் வழங்கப்பட்டு வருகின்றது.

வெளியீட்டு உதவிச் செயற்திட்டம்

வெளியீட்டு உதவி செயற்திட்டத்தின்ன கீழ் 2015 ஆம் ஆண்டில் இருந்து 2018 ஆம் ஆண்டுவரை சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ள கையெழுத்துப் பிரதிகளின் எஞ்சியிருந்த செயற்பாடுகள் இந்த வருடத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அதனுடன் தொடர்புடைய உடன்படிக்கைகளை கையெழுத்திட்டு, எழுத்தாளருக்கான உதவி தொகையை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, அதன் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட 36 கையெழுத்துப் பிரதிகளின் பொருட்டு நூலாசிரியர்களுடன் உடன்படிக்கையில் கையொப்பமிடுதல் 2020 ஜனவரி 27 மற்றும் மார்ச் 03ஆம் திகதிகளில் நடைபெற்றது. இச்செயற் திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் 29 நூலாசிரியர்களுக்கு வெளியீட்டு உதவியாக ரூபா.2,109,902.00 வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செயற் திட்டத்தின் கீழ் 2020 ஆண்டின் பொருட்டு புதிய கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், அதன்கீழ் எழுத்தாளர்களிடம் இருந்து 85 கையெழுத்துப் பிரதிகளை சபை பெற்றுள்ளது. இச் செயற்திட்டத்திற்குரிய 2021 ஆம் ஆண்டிற்கான கையெழுத்துப் பிரதிகளைப் பெற்றுக் கொள்தல் 2020 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதியில் இருந்து டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நடைமுறைப் படுத்தப்பட்டதுடன், அதன்பொருட்டு எழுத்தாளர்களிடம் இருந்து 19 கையெழுத்துப் பிரதிகள் பெறப்பட்டுள்ளன. எது எப்படியாயினும் கிடைக்கப்பெற்ற கையெழுத்துப் பிரதிகள் போதிய அளவு இல்லாமையால் கையெழுத்துப் பிரதிகளை பெற்றுக்கொள்ளும் கால எல்லை நீடிக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் வெளியீட்டு உதவி வழங்கப்பட்ட நூல்கள் பற்றிய விபரம்

தொடர் இல	கோவை இலக்கம்	பாடத்துறை	நூலாசிரியர்	நூற் பெயர்
01	2016/28	சிறு கதை	கருணா குமாரசிங்க	மங்கள கமண
02	2016/49	சிறப்பிலக்கியம்	விமலா தேவநாரயணன்	சம்பிரதாய ஹெல கொவித்தன
03	2016/59	சிறப்பிலக்கியம்	நந்தா வணசுந்தர	Mosaic of the woman
04	2016/168	சிறப்பிலக்கியம்	ஆனந்த திசாநாயக்க	ஜேம்ஜ்பொண்ட சந்தகா நொ-மிசென சுப்பிரி ரஹஸ் தூதயா
05	2016/184	சிறப்பிலக்கியம்	சிந்தக்க ரணசிங்ஹ	ஹங்ஸதீபனிய
06	2017/37	சிறுகதை	ஜீ. ஏ. நாளினி	Falk tails in Ancient Sri Lanka
07	2017/39	சிறுகதை	ஆர்.எம். அசோகாநந்த	பேம் ஹசுன சக தவத் கதா
08	2017/55	சிறுகதை	சம்பத் விஜேவர்தத்தன	கந்துளு இவற நா

09	2017/56	சிறப்பிலக்கியம்	.ஜீ.டீ.எஸ். பெரேரா	Fables of Esoft Age
10	2017/71	கவி	ஜே.ஜே.விக்கிரமசேன	கந்துளு சக மீபனி
11	2017/74	பாடல் கட்டுரை	ஜயந்த க. ஜோதியரத்ன	சிஹின இவறாய்
12	2017/100	புனைகதை	டீ.பீ. ரம்பொடகெதற	சரஸ்வதிகே தியனிய
13	2017/105	சிறப்பிலக்கியம்	எம். டப். ஜினதாச	விஸ்மய ஜணக மரணய
14	2017/114	கவி	தரங்க லக்மால் ஜயசூரிய	வாசிற்றி கிய துவட்ட
15	2017/131	புனை கதை	கே. ஜீ. சிறிசேன	மினிகத்த கினிகனீ
16	2017/132	சிறு கதை	மல்காந்தி பெரேரா	ஓபாய் மகே சந்த
17	2017/135	சிறுகதை	ரணவீர வனசிங்ஹ	திமிராங்கனீ
18	2017/137	மொழிபெயர்ப்பு	ஷசினி சந்திரசேகர	சம்பி
19	2017/143	சிறப்பிலக்கியம்	N. Parthiepan	Arivulaham
20	2017/157	கவி	டப்.எம்.ரீ.என். விக்கிரம சிங்ஹ	சந்தகின்நரீ
21	2017/159	ஆய்வு	கே.கே.ஈ. பெரேரா	சிறீலங்காவே வர்ஷா பத்தனய சக றபர் வகாவ
22	2018/05	மதியுரைக் கதை	அத்துள ஆர். பெரேரா	தென முத்து முத்து
23	2018/09	சிறுகதை	சுமேதா நவரத்ன	மார்த்தாகே தவஸ் கால
24	2018/10	சிறப்பிலக்கியம்	துசாரா தர்மசிறி செனவிரத்ன	ரட்ட சபாவ கெவத் வரிக்க சபா
25	2018/14	சிறு கதை	காந்தி லொக்கு நாரம் கொட	இலத்தட்டுவ
26	2018/21	Poem	H.L.Abdul Guthous	Ethaurayiru
27	2018/29	புனை கதை	எஸ்.சாந்த துணுகார	பொறதிய
28	2018/38	விஞ்ஞான புனைகதை	ஜயரத்ன இஹள கொடிப்பிலி	ஆங்கஹறு பிரத்தியந்த தேசய
29	2018/43	கவி	ஆரியபால ரத்நாயக்க	மதக்க கிர பச கியெமி

சிறுவர் மற்றும் பதின்ம வயதினருக்கான இலக்கியக் கையெழுத்துப் பிரதிகளின் செயற்திட்டம்

சிறுவர் மற்றும் பதின்ம வயதினருக்கான இலக்கியக் கையெழுத்துப் பிரதிகளின் செயற்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் இருந்து 2018 ஆம் ஆண்டு வரையிலான கையெழுத்துப் பிரதிகளின் எஞ்சிய வேலைகள் இவ்வருடம் நிறைவு செய்யப்பட்டதுடன் உடன்படிக்கைகளில் கையெழுத்திடல் மற்றும் நூல் உதவித் தொகைகளை செலுத்தும் செயற்பாடுகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட 25 கையெழுத்துப் பிரதிகளின் பொருட்டு எழுத்தாளர்களுடன் 2020 ஆம் ஆண்டு 27 ஆம் திகதி உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட கையெழுத்துப் பிரதிகளிடையே 20 எழுத்தாளர்களின் பொருட்டு வெளியீட்டு உதவியாக ரூபா 1,467,015.15 வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் பொருட்டு சிறுவர் மற்றும் பதின்ம வயதினருக்கான இலக்கியக் கையெழுத்துப் பிரதிகளைப் பொறுப்பேற்றதுடன் அதன்கீழ் சபையிடம் 37 கையெழுத்துப் பிரதிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இக் கையெழுத்துப் பிரதிகளிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட 18 கையெழுத்துப் பிரதிகள் மதிப்பாய்விற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டின் பொருட்டு கையெழுத்துப் பிரதிகளை ஒப்படைப்பது

2020 ஒக்டோபர் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை நடைமுறைப் படுத்தப்பட்டதுடன், பின்பு அக்கால எல்லை 2021 மார்ச் மாதம் 05 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது. இக் காலப்பிரிவில் 08 சிறுவர் மற்றும் பதின்ம வயதினருக்கான இலக்கியக் கையெழுத்துப் பிரதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

2020 ஆம் ஆண்டில் சிறுவர் மற்றும் பதின்ம வயதினருக்கான நூல்வெளியீட்டு திட்டத்தின்கீழ் உதவி வழங்கப்பட்ட நூல்கள் பற்றிய விபரம்.

தொடர் இல	கோவை இலக்கம்	பாடத்துறை	நூலாசிரியர்	நூற் பெயர்
01	2018/J/01	சிறுவர் கதை	ஆர்.ஏ.எஸ். லாலனி	ஆப்புரு பம்பயா
02	2018/J/07	சிறுவர் கதை	ஜே.ஏ.எஸ்.எஸ். குண-வர்த்தன	The Nightingale & Other Stories
03	2017/J/09	சிறுவர் கதை	எம்.டப்.எம். ரசீனா	பூசி சக நப்புறு மெகல்ல
04	2018/J/10	சிறுவர் கதை	ஜவன் அல்விஸ்	Blue Yellow and Green
05	2018/J/11	சிறுவர் கதை	சுனில் கொடகே	மல் வாகே லமய்
06	2018/J/12	சிறுவர் கதை	ஜே.ஏ. நாளனீ	கடிசற கூம்பிச்சி
07	2017/J/15	சிறுவர் கதை	சோமா ஜயகொடி	அப்பச்சி புத்து நளவாய்
08	2017/J/31	சிறுவர் கதை	சிறியலதா பரணவிதான	கத்திகாகே சாரிகாவ
09	2017/J/36	சிறுவர் கதை	எம்.டீ.சீ.பீ. சபரமாது	The Fairy & Samanala Kanda
10	2017/J/37	சிறுவர் கதை	சந்திர சேன கொடித்-துவக்கு	ரண் சமநல பஞ்சா
11	2017/J/46	சிறுவர் கதை	அனுர சிறீ குமாரி வீரசிங்ஹ	கூம்பி கூம்பி கியன கத்தா
12	2017/J/50	சிறுவர் கதை	எம்.தயானி சிசிரகாந்தி	அனுன்ர கள தே தமன்ட பள தே
13	2017/J/51	சிறுவர் கதை	வீ. நந்தா பெரேரா	இறஹாமிட்ட மொக்கத உனே
14	2017/J/56	சிறுவர் கதை	பத்மா மனிகே உடவத்த	மேஜிக் பேன
15	2017/Y/008	பதின்மவயதி-னர் இலக்கியம்	அத்துல ஆர். பெரேரா	முல்லா நஜஸ்ருதீன் கத்தா
16	2018/Y/08	பதின்மவயதி-னர் இலக்கியம்	டீ.ஏ.பீ.எஸ். குணவர்த்-தன	பண்டி
17	2018/Y/11	பதின்மவயதி-னர் இலக்கியம்	கே. எல்.பீ.ஏ. ரம்பிடிகல	ஆடம்பரகார புத்தெக்
18	2017/Y/18	பதின்மவயதி-னர் இலக்கியம்	ஞானசேன பத்திரண	திய அல்லே ஹப்பனு
19	2017/Y/20	பதின்மவயதி-னர் இலக்கியம்	குமாரி அபேகுணவர்த்-தன	பஹன் எலியக்
20	2017/Y/54	பதின்மவயதி-னர் இலக்கியம்	ஏ.எம்.பி.முத்துபண்டா	ரத்தறன் துவெக்

புதிய வெளியீடுகளைக் கொள்வனவு செய்யும் செயற்திட்டம்

நூல் வெளியீட்டுத் துறையில் ஈடுபடும் எழுத்தாளர்களுக்கு உதவி அளிக்கும் நோக்கத்துடன் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்படும் வெளியீடுகளில் ஒரு தொகை பிரதிகளைக் கொள்வனவு செய்தல் இத் திட்டத்தின் கீழ் நடைபெறும். இதன்பிரகாரம் சபையில் ஒப்படைக்கப்பட்டிருந்த அச்சிடப்பட்ட 329 வெளியீடுகளுள் மதியுரைக்குழுவின் விதந்துரைக்கு அமைவாக அனுமதிக்கப்பட்ட 97 வெளியீடுகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 97 நூலாசிரியர்களிடம் ரூபா. 364,837.00 பெறுமதியான பிரதிகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறப்பு இலக்கிய நூல்களை மீளப் பதிப்பித்தல்

பன்சீயப் பனஸ் ஜாதக நூல் – இரண்டாம் பதிப்பு

சபையினால் நடைறைப் படுத்தப்படும் சிறப்பு இலக்கியங்களை புதுப்பித்தமைத்து அச்சிட்டு வெளியிடும் செயற்திட்டத்தின் கீழ் பன்சீயப் பனஸ் ஜாதக நூல் புதுப்பித்தமைக்கப்பட்டு அச்சிட்டு வெளியிடப் பட்டுள்ளது. எனினும் அதன் முதலாம் பதிப்பின் பிரதிகள் முடிவடைந்த காரணத்தினால் அதன் இரண்டாவது பதிப்பை வெளியிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்துள்ளது. அந்த நூலின் இரண்டாவது பதிப்பின் போது அதன் முதலாம் பதிப்பில் காணப்பட்ட எழுத்துப் பிழைகள் மற்றும் ஏனைய குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அதன் நூல் அறிமுகத்துடன் கூடிய 05 தொகுதிகளைக் கொண்ட பன்சீயப் பனஸ் ஜாதகப் புத்தகத்தின் இரண்டாம் பதிப்பின் செயற்பாடுகளை இவ்வருடத்தில் நிறைவு செய்வதற்கு சாத்தியமாகியது.

நூலக விஞ்ஞானத் துறையிலான வெளியீடுகளை மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடுதல்.

நூலக தகவல் விஞ்ஞானத் துறையிலான வெளியீடுகளை தேசிய ரீதியில் பிரச்சாரம் செய்யும் நோக்கத்துடன் வருடந்தோறும் அத்துறைசார் வெளியீடுகளை வெளியிடுதல் அல்லது சர்வதேச ரீதியில் வெளியிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட வெளியீடுகளை சிங்களம் அல்லது தமிழ் மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடப்படுகிறது. இச் செயற்திட்டத்தின் கீழ் சர்வதேச நூலக சங்கங்களின் சம்மேளனத்தினால் (**IFLA**) வெளியிடப்பட்ட **Guidelines for Library Services to Prisoners (3rd edition)** நூலை சிறைக் கைதிகளிற்கான "நூலக சேவைகள் தொடர்பான வழிகாட்டல் 3வது பதிப்பு" என்ற பெயரில் கலாநிதி செல்வி பிரமிளா கமகேயினால் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டதுடன், அந் நூல் சபையின் வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சிங்கள மொழிபெயர்ப்பானது சர்வதேச நூலக சங்கங்களின் சம்மேளனத்தின் வெப் பக்கத்தில் வெளியிடப் பட்டுள்ளது. (www.ifla.org)

பிரலேகா சஞ்சிகை

சபையினால் காலாண்டு வெளியீடாக வெளியிடப்படும் பிரலேகா காலாண்டுச் சஞ்சிகையின் 2019 ஒக்டோபர் – டிசம்பர் தொகுதியானது "கவிதைகள்" கருப்பொருளாகக் கொண்டு வெளியிடப் பட்டதுடன், 2020 அம் ஆண்டில் நாட்டில் நடைபெற்ற COVID – 19 தொற்றினால் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக 2020 ஆண்டின் முதல் இரண்டு காலாண்டு வெளியீடுகளையும் ஒன்றாக இணைத்து வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

NATNET LANKA செய்தி மடல்

நூலகத் துறையின் பல நிகழ்வுகளை வெளியிட்டுவரும் **NATNET LANKA** செய்தி மடலானது அரையாண்டு வெளியீடாக வெளியிடப்பட்டு வந்தபோதும் நடைபெற்றுவந்த COVID- 19 தொற்றுக் காரணமாக ஒரு தொகுதியாக வெளியிடுவதற்குத் தயார் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச நியம நூல் இலக்கச் செயற் திட்டம் (ISBN/ ISSN/ ISMN)

இலங்கையில் அச்சிட்டு வெளியிடப்படும் நூல்கள் உட்பட சகல வெளியீடுகளின் பொருட்டும் சர்வதேச நூல் இலக்கங்களை வழங்கும் தேசிய மத்திய நிலையமாக தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையே செயற்படுகிறது. அதன்பிரகாரம் சகல நூல்களின் பொருட்டும் சர்வதேச நியம நூல் இலக்கமும் (ISBN), சகல பருவ வெளியீடுகளுக்கும் சர்வதேச சஞ்சிகைகள் நியம இலக்கமும் (ISSN), சகல குறியீடுகளுடன் வெளியிடப்படும் சங்கீத வெளியீடுகளின் பொருட்டுசர்வதேச நியம சங்கீத இலக்கமும் (ISMN) வழங்கப்படுகின்றன.

நியம இலக்கங்களைப் பெற்றுக்கொள்வதன் பொருட்டு தொடரறா (Online) மூலம் பணம் செலுத்தும் முறைமையைத் தாபித்தல்.

நூல் வெளியீட்டுத் துறையில் ஈடுபடும் எந்தவொரு வெளியீட்டாளருக்கும் / நூலாசிரியருக்கும் தாம் இருக்கும் இடத்தில் இருந்தே ஒன்லைன் மூலம் குறிப்பிட்ட விண்ணப்பப் பத்திரத்தை நிறைவுசெய்து பணத்தைச் செலுத்தி நியம இலக்கங்களைப் பெற்றுக்கொள்ள வசதி செய்து கொடுக்கும் முகமாக இம் முறை விதந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த ஒன்லைன் தொகுதியானது மென்பாண்டங்களை அபிவிருத்தி செய்யும் தனியார் நிறுவனம் ஒன்றினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன். பணம் செலுத்தும் முறையை (Payment Gateway) மக்கள் வங்கியின் மூலம் நடைமுறைப் படுத்துவது தொடர்பாக மக்கள் வங்கியுடன் 2020 ஜுன் 02 திகதி உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டது. இது தொடர்பான மென்பாண்டத்ததை அபிவிருத்தி செய்த நிறுவனத்துடன் உடன்படிக்கை ஒன்று 2020 யூலை 03 ஆம் மேற்கொள்ளப்பட்டது. இவ்விதம் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பாண்ட முறைமையின் மூலம் ISBN, ISSN, ISMN வழங்குவது 2020 நவம்பர் மாதம் 17 ஆம் திகதியில் இருந்து நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இதன்பொருட்டு www.isbn,lk வெப் தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் சர்வதேச நியம இலக்கங்களை ஒன்லைன் மூலம் பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச நியம நூல் இலக்கத் திட்டம் (ISBN)

இந்த வருடத்தின் நவம்பர் மாதத்தில் இருந்து ISBN இலக்கங்களின் பொருட்டு விண்ணப்பித்தல் மற்றும் வழங்குதல் ஒன்லைன் மூலம் (Online) நடைபெறுவதுடன், ISBN இலக்கங்கள் 7071 வழங்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு புதிதாகப் பதிவு செய்துள்ள வெளியீட்டாளர்களின் எண்ணிக்கை 1020 ஆகும். இத்திட்டத்தின் கீழ் நூல்களின் பொருட்டு இலக்கங்களைப் பெற்றுக்கொண்ட வெளியீட்டாளர்கள் தொடர்பான தகவல்கள் சர்வதேச ரீதியில் வெளியிடப்படும். ISBN இலக்கங்களைப் பெற்றுக் கொண்ட வெளியீட்டாளர்களினால் சுயவிருப்பின் பேரில் வழங்கப்பட்ட 1201 நூல்கள் இலங்கைத் தேசிய நூலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இந்த இலக்கங்களை வழங்கியதன் மூலம் கிடைத்த வருடத்திற்கான வருமானம் ரூ. 707,100.00 ஆகும்.

சர்வதேச நியம பருவ வெளியீடுகள் இலக்கத் திட்டம் (ISSN)

நாட்டினுள் வெளியிடப்படும் சகல பருவ வெளியீடுகளுக்கும் சர்வதேச நியம பருவ வெளியீடுகளுக்கான இலக்கங்கள் (ISSN) வழங்கப்படுகின்றன. இந்த நியம இலக்கங்களை வழங்கும் தேசிய மத்திய நிலையமாக செயற்படுவது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையாகும். இந்த வருடம் நவம்பர் மாதத்தில் இருந்து ISSN இலக்கங்களை வழங்குவது ஒன்லைன் மூலம் நடைபெற்று வருவதுடன் இவ்வருடத்தில் 165 பருவவெளியீடுகளுக்கு ISSN இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்விதம் இலக்கங்களை வழங்கியதன் மூலம் சபைக்கு கிடைத்த வருடாந்த வருமானமாக ரூபா.16,500.00 ஆகும்.

சர்வதேச நியம சங்கீத இலக்கத் திட்டம் (ISMN)

நாட்டினுள் வெளியிடப்படும் இசைக்குறியீடுகளுடன் கூடிய சங்கீத வெளியீடுகளுக்கு சர்வதேச நியம சங்கீத இலக்கத்தை (ISMN) வழங்கும் தேசிய மத்திய நிலையமாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை செயற்படுகிறது. ஏனைய நியம இலக்கங்களைப் போலவே இந்த வருடம் நவம்பர் மாதத்தில் இருந்து ISMN இலக்கங்களை வழங்குவதும் ஒன்லைன் மூலம் நடைபெறுகிறது. இவ் வருடத்தில் வழங்கப்பட்ட ISMN இலக்கங்களின் எண்ணிக்கை 08 ஆகும். இவ் இலக்கங்களை வழங்கியதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ. 800.00 ஆகும்.

2020 ஆம் ஆண்டில் ISBN, ISSN மற்றும் ISMN கீழ்க்காட்டப்பட்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

வெளியீட்டாளர் பிரிவு	நூற் தலைப்புக்களின் எண்ணிக்கை		
	ISBN	ISSN	ISMN
வியாபார மட்டத்திலான வெளியீட்டாளர்கள்	3737	25	01
அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன வெளியீட்டாளர்	1195	109	01
ஆசிரிய / தனிநபர் வெளியீட்டாளர்	2139	31	06
மொத்தம்	7071	165	08

நூல்களை மொழிபெயர்க்கும் செயற்திட்டம்

இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையே ஒற்றுமையை கட்டியெழுப்பும் நோக்கத்துடன் அந்தந்த மொழிகளில் எழுதப்படும் நூல்கள் தொடர்பாக இனங்களுக்கிடையே தெளிவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த நூல்களை மொழிபெயர்ப்புச் செய்யும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரையிலான இலக்கியப் பாலம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இச் செயற்திட்டத்தின் கீழ் தமிழ் மொழிமூலம் எழுதப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட சில சிறுகதைகளை சிங்கள மொழியிலும், சிங்கள மொழியில் எழுதப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட சில சிறுகதைகளை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக சிறு கதைகளை இனங்காணல் மற்றும் தொழிபெயர்ப்புச் செய்யும் செயற்பாடுகள் இவ்வருடத்தில் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளதுடன், எதிர் காலத்தில் இந்த நூல்களை அச்சிட்டு வெளியிட சபை எதிர்பார்க்கிறது.

சபையின் வெளியீடுகளை அச்சடுதல்

இதன் கீழ் சபையினால் கீழ்க்காணப்படும்ட விதத்தில் வெளியீடுகள் அச்சிடப்பட்டுள்ளன.

வெளியீட்டின் பெயர்	அச்சிட்ட பிரதிகளின் எண்ணிக்கை
இலங்கைத் தேசிய நூற்பட்டியல் 2019 / 1 இலிருந்து 12 வரையான தொகுதிகள்.	2118
பருவ வெளியீட்டுக் கட்டரைச் சுட்டியின் 2019 /1 மற்றும் 2ம் தொகுதிகள்	156
பட்டப் பின்படிப்பு ஆய்வறிக்கைகளின் சுட்டி	103

Kiyawamu.lk செயற்திட்டம்

ஓன்லைனின் மூலம் வாசகர்கள் நூல்களை வாசிப்பதற்கு வசதிசெய்து கொடுக்கும் நோக்கத்துடன் இலங்கை ரெலிகொம் நிறுவனத்தடன் இணைந்து இத்திட்டம் நடைறைப்படுத்தப்படுகிறது. இதன் கீழ் தெரிவு செய்யப்பட்ட நூல்கள் இலத்திரனில் e-pub வெளியீடுகளாக மொழிபெயர்க்கப்பட்டு Kiyawamu.lk இல் (Portal) உட்புகுத்தப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் பல இனங்காணப்பட்ட நூல்கள் இலத்திரனியல் வெளியீடுகளாக மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன. வெளியீட்டு உரிமையினால் ஏற்படும் கட்டுப்பாடுகள் மற்றும் சிங்கள / தமிழ் மொழிகளில் வெளிவரும் நூல்களை இலத்திரனியல் நூல்களாக மாற்றும்போது ஏற்படும் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக இச் செயற்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தடைகள் ஏற்பட்டுள்ளன.

"நாட்டின் பெறுமதிமிக்க நூல்" 10,000 நூல்களை எழுதும் தேசிய செயற்திட்டம்

"நாட்டின் பெறுமதிமிக்க நூல" 10,000 நூல்களை எழுதும் தேசிய செயற்திட்டமானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி அப்போதிருந்த கல்வி அமைச்சரின் தலைமையின் கீழ் கல்வி அமைச்சில் ஆரம்பிக்கப்பட்டது. இக் காலகட்டத்தில் உலகெங்கும் வியாபித்திருந்த COVID -19 தொற்றுக் காரணமாக சுமார் 41 இலட்கம் மாணவ மாணவியர் வீடுகளிலேயே தமது காலத்தைக் கழித்ததுடன், அவர்களின் மனோ தைரியத்தை வளர்த்து சவால்களுக்கு முகம்கொடுக்கும் சக்தியை வளர்ப்பதற்காக இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந் நூலானது சிறுவர் கதைகள், கவிதைகள், பதின்ம வயதினரின் நூல்கள், சிறு கதைகள், புனைகதைகள், நாடகங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், சரித்திரக் கதைகள், மாயக் கதைகள், புராணக் கதைகள், மர்மக் கதைகள், உவமைக் கதைகள், நாட்டார் கதைகள், விஞ்ஞானக் கதைகள், சூழல் கதை, சுயசரிதை, கட்டுக்கதைகள், மிகைப்படுத்தப்பட்ட கதைகள், சமயக் கதைகள், வெற்றிக் கதைகள், பாடத்துடன் தொடர்புடைய மற்றும் புனர் உற்பத்தி (மறுபிறப்பு) போன்ற ஏதாவது தலைப்பின் கீழ் எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதன்பிரகாரம் பாடசாலை மாணவ மாணவியரால் எழுதப்படும் நூல் பாடசாலைக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு, கோட்டக் கல்விப் பனிமனை, மாகாணக் கல்வி அலுவலகத்தினூடாக , தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் சிறுவர் கையெழுத்துப் பிரதிகளை இனங்கண்டு அவற்றை வகைப்படுத்தும் வேலைகள் நடைபெற்றதுடன் , சபை அலுவலர்களால் முதற் சுற்று மதிப்பாய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டது.

நூலகக் கூட்டுறவுப் பிரிவு

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நூலகங்கள் போல, துறையுடன் தொடர்புபட்ட பல்வேறு நிறுவன நூலகங்களுடன் கூட்டுறவை மேற்கொள்வது இப்பிரிவின் முக்கிய செயற்பாடாகும். இதன் கீழ் உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள தேசிய நூலகங்கள் மற்றும் வேறு துறைகளுடன் தொடர்புடைய நூலகங்களைப் போல சர்வதேச நூலக சங்க சம்மேளனம், யுனெஸ்கோ அமைப்பு போன்ற அமைப்புக்களுடன் தொடர்பைக் கொண்டிருத்தல் மற்றும் தேசிய ரீதியில் பல்வேறு நூ லகங்கள், நூலக அமைப்புக்கள், மற்றும் சங்கங்களுடன் தொடர்பைப் பேணிவருவதும் நூலகக் கூட்டுறவுப் பிரிவின் கடமையாகும்.

வெளியீடுளின் பரிமாற்றச்சேவை

பரிமாற்றச் சேவையின்கீழ் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களின் இருந்து கிடைக்கப் பெறும் வெளியீடுகள் தேசிய நூலகத்தில் ஒப்படைக்கப்படுகிறது. அதன்பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் 07 வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தும், 01 உள்நாட்டு நிறுவனத்திலிருந்தும் 09 நூல்களும் 59 பருவவெளியீடுகளும் 05 இறுவட்டுக்களும் (DVD-pack) பெறப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் வெளியீடுகளை பரிமாறும் சேவையின் கீழ் சீனாவின் தேசிய நூலகத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற, சீன மொழியில் எழுதப்பட்ட 37 நூல்களை களனிப் பல்கலைக்கழகத்தின் நவீன மொழிக் கற்கைப் பிரிவிற்கு அன்பளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இச் சேவையின்கீழ் சபையினால் வெளியிடப்பட்ட இலங்கைத் தேசிய நூற்பட்டியலின் 2019 பெப்ரவரியில் இருந்து ஜுன் மாதம் வரையிலான தொகுதிகள் ஜப்பான், கொரியா, சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து, பாகிஸ்தான், பங்களாதேஸ், அவுஸ்திரேலியா, இந்தியா, மலேசியா, மாலைதீவு, கொங்கொங், ரஷ்யா, சுவிற்சலாந்து, துருக்கி மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளின் தேசிய நூலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. துருக்கியின் மக்கள் அரசாங்கம் இலங்கைத் தூதுவராலயத்தினூடாகக் கேட்டுக்கொண்டதன் பிரகாரம் இந்நாட்டில் வெளியிடப்பட்ட கீழ்க்காணப்படும் வெளியீடுகளை அந்நாட்டின் தேிய நூலகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- Mahawansa – The great chronicle of Ceylon- Author, Wilhelm Giger, Published by Buddist Cultural Center
- Dhammapada – Author, Narada Thero, Published by Buddist Cultural Center
- The Prehistory of Sri Lanka :A Ecological Perspective – Author, S.U. Deraniyagala, Published by Department of Archaeology
- Environment , Town, Village, and Monastic Planning- Author , Roland Silva, Published by Department of Archaeology
- Ancient Ceylon – Journal of the Department of Archaeology, Sri Lanka- No. 25- July 2016
- Ancient Ceylon – Journal of the Department of Archaeology, Sri Lanka- No. 24- July 2015
- Ancient Ceylon – Journal of the Department of Archaeology, Sri Lanka- No. 23- 2012
- History of the Kingdom of Rohana (From the Earliest to 1500 A.C. – Authir,Sirimal Ranawella, Published by Ministeryof Higher Education and Department of Archaeology.
- The Faithful Foreigner : Thilo Hoffamann, The Man who Saved Sinharaja – Author, Douglas B. Ranasinghe, Published by A. Baur & Cio (Pvt.) Ltd.
- A History of Sri Lanka - Author, K.M.de Silva
- Colloction of Drawings and paintings – Author, L.K. Karunaratna
- The Art of Mask Making in Sri Lanka – Author, Lionel Bentharage

சர்வதேச பருவ வெளியீடுகளுக்கான சந்தாவைத் தற்காலப்படுத்தல்

தேசிய புவியியல் சங்கத்தினால் (National Geographic Society) வெளியிடப்படும் **National Geographic** சஞ்சிகையின் சந்தாவை புதுப்பித்தமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாதந்தோறும் வெளியிடப்படும் இப்பருவ வெளியீடானது தேசிய நூலகத்தின் வாசகர்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

நிறுவன அங்கத்துவத்தை புதுப்பித்தமைத்தல்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை 1993 ஆம் ஆண்டில் இருந்து சர்வதேச நூலக சங்கங்களின் சம்மேளனத்துடன் (IFLA) தொடர்ந்து அங்கத்துவராக இருப்பதுடன், 2020 ஆம் ஆண்டிற்கான அதன் வருடாந்த அங்கத்துவத்தைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தரவுத்தளங்களின் அங்கத்துவத்தைப் புர்துப்பித்தல்

புது டெல்லி நகரத்தில் அமைந்துள்ள இந்திய சர்வதேச மத்திய நிலையம் (Indian International Centre) மூலம் நடைமுறைப்படுத்திச் செல்லப்படும் DELNET (Development of Library Network) தகவல் வலையமைப்பின் அங்கத்துவம்˙ பெறப்பட்டுள்ளதுடன், இந்த தகவல் வலையமைப்பினுள் நூலக தகவல்துறைக்கு உரிய கட்டுரைகள் உட்பட பல பெறுமதிவாய்ந்த தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டிற்கான இந்த வலையமைப்பின் வருடாந்த அங்கத்துவம் புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன் தரவுத் தளத்திற்குப் பிரவேசிப்பதற்கான வசதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தகவல் துறைசார் தேசிய மற்றும் சர்வதேச வலையமைப்புக்களுடன் (**Information Network**) தொடர்பை ஏற்படுத்தல்

தேசிய ரீதியில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள வலையமைப்பாகக் காணப்படும் AGRINET (விவசாயத் துறை மற்றும் தொடர்புடைய தகவல் வலையமைப்பு), HELLIS (சௌக்கிய துறை மற்றும் தொடர்புடைய தகவல் வலையமைப்பு) ஆகிய தகவல் வலையமைப்புக்களுடன் இலங்கைத் தேசிய நூலகம் தொடர்ந்து தொடர்பைப் பேணி வருகின்றது. இந்தத் தகவல் வலையமைப்பின் மூலம் அந்த அந்தத் துறைசார் கற்கைகளை மேற்கொள்பவர்களுக்கு புதிய தகவல்களை இலகுவாகத் தேடிக் கண்டுகொள்ள வசதி வழங்கப்பட்டுள்ளது.

பிற தேசிய நூலகங்களின் அபிவிருத்தி அறிக்கை மற்றும் திட்ட வரைபுகளைப் பெற்றுக்கொள்தல்

இலங்கைத் தேசிய நூலகத்தின் கட்டமைப்பை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு உபயோகப்படும் விதத்தில் உலகின் பிற நாடுகளில் உள்ள தேசிய நூலகங்களினால் வெளியிடப்படும் வருடாந்த அபிவிருத்தி அறிக்கைகள் மற்றும் திட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அதன் கீழ் அவுஸ்திரேலியா, சீசெல்ஸ், சிங்கப்பூர், மாலைதீவு, அயர்லாந்து, நியுசீலாந்து, இந்தியா, ஜப்பான், பிலிப்பைன், இஸ்ரேல், வியட்நாம் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளில் இருந்து மேற் குறிப்பிடப்பட்:டுள்ள அறிக்கைகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாகாண நூலக சேவைகள் சபைகளுடன் கூட்டுறவைப் பேணல்

இலங்கையில் தற்போது சப்பரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களுடன் இணைந்து மாகாண நூலக சேவைகள் சபைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மும்முரமாக பங்களிப்புச் செய்வதுடன் சபையின் பணிப்பாளர் நாயகம் சகல பணிப்பாளர் சபைகளையும் பிரதிநித்துவப் படுத்துகிறார். சபையின் வெளியீடுகள் இந்த மாகாண நூலக சேவைகள் சபைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் அவர்களின் ஆண்டுத் திட்டவரைபுகள் மற்றும் ஆண்டு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

நூலகத் துறையிலான பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக தேசிய கொள்கை விளக்கமொன்றைத் தயாரித்தல்

நூலகத் துறையில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் பதவிகளுக்கு ஆட்சேர்க்கும்போது ஏதாவதொரு ஒருசீரான முறையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தேசிய கொள்கை ஒன்றைத் தயாரிப்பதற்கு சபை திட்டமிட்டுள்ளது. அதனுடன் தொடர்பு பட்ட அடிப்படை திட்டத்தை தயாரிப்பதற்காக பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நூலகம் சார் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு அதன் ஆரம்பத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வேறு கூட்டுறவுச் செயற்திட்டங்கள்

இலங்கை அரச நூலகர் பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக மற்றும் பொது நூலகத் துறையில் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக உள்ள சிக்கல்கள் தொடர்பாக தொடர்புள்ளவர்களுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் இலங்கை அரசாங்க நூலகர்களின் சேவை தொடர்பான சட்டவரைபில் காணப்படும் பிரச்சனைகள் தொடர்பாக ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்வுகளுக்கான மதியுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

நூலகங்களைத் தர நிர்ணயம் செய்தல்

இலங்கையில் உள்ள சகல நூலகங்களின் பொருட்டும் நியமங்களை உருவாக்குதல் மற்றும் அந்த நியமங்களுக்கு அமைவாக நூலகங்களைத் தர நிர்ணயம் செய்தல் சபையின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும். அதன் பிரகாரம் இந்த வருடம் கீழ்க் காட்டப்பட்டுள்ள நூலகங்களைத் தர நிர்ணயம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

	நூலகத்தின் பெயர்	பொறுப்பாகவுள்ள நிறுவனம்	வழங்கப்பட்ட தரம்	தரம் வழங்க –ப்பட்ட திகதி
01	குளியாப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி நூலகம்	குளியாப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி	தரம் ii	2020.07.21
02	தெலிஜ்ஜவில பொது நூ லகம்	தெலிஜ்ஜவில பிரதேச சபை	தரம் ii	2020.07.21
03	சிறீ குணானந்த பொது நூ லகம்	பலபிட்டிய பிரதேச சபை	தரம் ii	2020.07.21
04	ஒட்டமாவடி பொது நூலகம்	கோரளைப் பத்து மேற்கு பிரதேச சபை	தரம் ii	2020.07.21
05	ஹக்மன பொது நூலகம்	ஹக்மன பிரதேச சபை	தரம் ii	2020.07.21
06	மெதகம ஆர்.ஏ.எம். குண சேகர பொது நூலகம்	மெதகம பிரதேச சபை	தரம் ii	2020.07.21
07	தியத்தலாவ பொது நூலகம்	தியத்தலாவ பிரதேச சபை	தரம் ii	2020.07.21

தேசிய பாடசாலை நூலகங்கள் தரநிர்ணயம் செய்யப்பட்ட விபரங்களைப் பெற்றுக்கொள்ளு முகமாக தயார் செய்யப்பட்ட கேள்விக் கொத்தை 250 பாடசாலைகளுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அக் கேள்விக் கொத்தை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் சட்டமா அதிபர் திணைக்கள நூலகத்தை தரம் உயர்த்துவதன் பொருட்டு பரிசீலனை செய்யப்பட்டதுடன், மூன்றாம் தர நூலகத்தின் பொருட்டு தேவையான நிபந்தனைகள் சிங்கள மற்றும் ஆங்கில் மொழிகளில் மாதிரிப் படிவத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தர நிர்ணயம் செய்வதற்காக தற்போது பெறப்படும் கட்டணத்தை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொது மற்றும் பாடசாலை நூலகங்களின் நியமங்களைத் திருத்தியமைப்பதற்காக குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 274 தேசிய பாடசாலைகள் தொடர்பான விபரங்கள் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போது தரநிர்ணயம் செய்யப்பட்டுள்ள நூலகங்களின் பட்டியலை (மாவட்ட மட்டங்களில் தயாரிக்கப்பட்டு) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தந்திரோபாய திட்டமிடற் பிரிவு

தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையின் சகல பிரிவுகளினதும் செயற்பாடுகளைத் திட்டமிடுதலுக்கு பங்களிப்புச் செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் தொடர்புபடுத்தல் என்பன தந்திரோபாய திட்டமிடற் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதற்கும் மேலால் நிருவாகச் செயற்பாடுகளை ஒழுங்காக நடைமுறைப்படுத்திச் செல்வதற்குத் தேவையான பங்களிப்புக்களை வழங்குவதும் இப்பிரிவின் கடமையாகும். நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளின் அபிவிருத்தி அறிக்கைகளின் மூலம் ஆண்டு, அரையாண்டு மற்றும் மாதாந்த அபிவிருத்தி அறிக்கைகள் தயாரிக்கப் படுவதுடன் மாதாந்தம் சிரேட்ட அலுவலர்களின் கூட்டங்கள் மற்றும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களையும் ஒழுங்கு படுத்துவது இப்பிரிவின் பொறுப்பாகும். இதற்கும் மேலால் வெளிநாடுகளுக்குச் செல்லும் சபை ஊழியர்களுக்குத் தேவையான விமானப் பயணச் சீட்டு, வீசா பெற்றுக் கொடுத்தல் போன்ற செயற்பாடுகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதும் தந்திரோபாய திட்டமிடற் பிரிவினால் நடைபெறுகிறது .

சிரேஷ்ட அலுவலர் கூட்டம் மற்றும் பணிப்பாளர் சபையின் கூட்டங்களை ஒழுங்குபடுத்துதல்

இந்த வருடத்தில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் - 19 தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் சிரேஷ்ட அலுவலர் கூட்டத்தை நடத்துவதற்கு இயலாமல் போனதுடன் 2020 ஆம் ஆண்டில் சகல பிரிவுத் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் அந்தந்த பிரிவுகளின் அபிவிருத்தியை ஆராய்ந்து பார்க்கும் நோக்கத்துடன் 09 சிரேஷ்ட அலுவலர் கூட்டங்களும் 07 பணிப்பாளர் சபைக் கூட்டங்களும் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.

வருடத்திற்கான செயற் திட்டம், மாதாந்த அபிவிருத்தி அறிக்கை மற்றும் வருடாந்த அறிக்கையைத் தொகுத்தல்

2020 ஆம் ஆண்டிற்கான செயற் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், மாதாந்த அபிவிருத்தி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வருடாந்த அறிக்கைகளைத் தொகுப்பதன் கீழ் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகளை இலங்கைப் பாராளு மன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக கல்வி அமைச்சில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் 2018 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை தொடர்பான கையெழுத்துப் பிரதி தயாரிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் மாநாடுகளில் அலுவலர்களை ஈடுபடுத்தல்

- 2020.02.06 – 13 வரை இந்தியாவின் தமிழ்நாட்டில் நடைபெற்ற வளர்ந்து வரும் நூலகங்களின் புதிய உற்பத்தியாளர்களின் வலையமைப்புக்கள் மற்றும் தெற்காசிய பிராந்திய நூலகத் தலைமைத்துவப் பங்களிப்பை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் பொருட்டு விரிவாக்கற் சேவைப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் திருமதி குசலா சஞ்சீவனி பங்கேற்பதற்கான சகல செயற்பாடுகளும் ஒழுங்குசெய்யப்பட்டது.

- 2020.02.17 – 20 வரை இந்தோனேசியாவில் நடைபெறவிருந்த ஆசிய மற்றும் பசிபிக் பிராந்திய நாடுகளின் தேசிய நூலகங்களின் பணிப்பாளர்களுக்கான 28வது மாநாட்டில் பணிப்பாளர் நாயகம் திரு. டபிள்யு. சுனில் பங்குபற்றுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தபோதும் பிராந்தியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியருந்து கோவிட் - 19 தொற்றுக் காரணமாக அம் மாநாடானது தற்காலிகமாகப் பிற்போடப்பட்டதன் காரணமாக பணிப்பாளரினால் அம்மாநாட்டில் கலந்துகொள்ளமுடியவில்லை.

நிருவாகப் பிரிவு

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சகல பரிபாலன செற்பாடுகளும் நிருவாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் கீழ் ஊழியர்களை ஆட்சேர்த்தல், ஊழியர் விடுப்பு, சம்பளக் கடன் மற்றும் முற்பணம் வழங்கல், வாகனக் கட்டுப்பாடு, களஞ்சியச் செயற்பாடுகளின் கட்டுப்பாடு, பாதுகாப்புச் செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பு மற்றும் மேற்பார்வை, சுவடிகள்கூட முகாமைத்தவம், (Record Room Management), வருடாந்த இருப்பெடுப்பு ஆகியன நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சாதாரண நிருவாகச் செயற்பாடுகள்

சபையின் சாதாரண நிருவாகச் செயற்பாட்டின் கீழ் தேவையுள்ள ஊழியர்களுக்கு புகையிரத வாரப் பிரவேசப் பத்திரம் பெற்றுக் கொடுத்தல், பாதுகாப்புச் சேவை தொடர்பான செயற்பாடுகள், வெளிநாட்டுப் பொதிகளை விடுவித்தல், ஊழியர் நலம்பேணல் தொடர்பாக தேவையான செயற்பாடுகளைத் மேற்கொள்தல், வருடாந்த சம்பள உயர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல், விடுப்பு ஏடுகளை தற்காலப்படுத்திச் செல்தல், சாதாரண / பதிவுத் தபால்களை தபாலிடுதல், சபை ஊழியருக்கான சீருடைகளைப் பெற்றுக்கொடுத்தல், அலுவலக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்தல், இருப்பெடுப்பு, களஞ்சிய நிருவாகம் உட்பட நிறுவனத்தின் சகல நிருவாகச் செயற்பாடுகளும் சரியாக நடைமுறைப்படுத்திச் செல்லப்பட்டது.

ஊழியர் சேவை மற்றும் பதவி உயர்வு / ஓய்வு பெறல்

இவ்வருடத்தில் நிறுவனத்தின் உள்ளக பதவி உயர்வின் கீழ் முகாமைத்துவ உதவியாளர் தரம் iii பதவியும் தர உயர்வின் கீழ் தகவல் உதவியாளர் தரம் I இன் பொருட்டு 08 ஊழியர்களும், முகாமைத்துவ உதவியாளர் தரம் I இன் பொருட்டு 03 ஊழியர்களும், நூலக உதவியாளர் தரம் I பொருட்டு 05 ஊழியர்களும், சாரதி தரம் I இன் பொருட்டு ஒரு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. ஊழியர்கள் ஓய்வு பெறுவதின் கீழ் இவ்வருடத்தினுள் 01 ஊழியர் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளதுடன் 06 ஊழியர்கள் சேவையில் இருந்து விலகிச் சென்றுள்ளனர்.

நிறுவனத்தின் வியூகத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்துதல் – பரீட்சைச் செயற்பாடுகள்.

வருடந்தோறும் நடைபெறும் வினைத்திறன்காண் தடைதாண்டிப் பரீட்சையை நடத்துவதன் கீழ் இவ்வருடத்தில் பல பதவிகளின் பொருட்டு வினைத்திறன்காண் தடைதாண்டிப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

பதவி	தடைதாண்டிப் பரீட்சை	விண்ணப்பித்தோர் எண்ணிக்கை
உதவிப் பணிப்பாளர் ii	i	03
நிருவாக அலுவலர் ii	i	01
தகவல் உதவியாளர் iii	i	05
தகவல் உதவியாளர் i	iii	02
முகாமைத்துவ உதவியாளர் iii	i	03
முகாமைத்துவ உதவியாளர் i	iii	04
அலுவலக உதவியாளர் iii	i	06
நூலக உதவியாளர் i	iii	01

பராமரிப்புப் பிரிவு

தேசிய நூலகக் கட்டிடத்தை புதுப்பித்தமைக்கும் வேலை நடைபெற்று வருவதனால் அவ் வேலையை மேற்பார்வை செய்வதுடன் தொடர்புடைய கூட்டங்களைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அலுவலக உபகரணங்கள் தொடர்பாக பராமரிப்பு உடன்படிக்கைகளில் ஒப்பமிடல் மற்றும் திருத்தி அமைக்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், பாவனைக்கு உதவாத உபகரணங்களை அகற்றுவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளல், மற்றும் புதுப்பித்தமைக்கப்பட்ட பிரிவிற்குத் தேவையான மரத் தளபாடங்களைப் பெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மோட்டார் வாகனப் பராமரிப்பு மற்றும் திருத்தி அமைக்கும் வேலைகள் தேவைக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டன. தோட்டப் பராமரிப்பை மேற்கொள்ளல் மற்றும் அதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல், மற்றும் சபைக் கட்டிடத்துடன் தொடர்புடைய வெளிக்கள நிறுவனத்தினால் நாளாந்தம் தூய்மைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொலைபேசிக் கட்டணம், மின்சாரக் கட்டணம், நீர்க் கட்டணம், இணையக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும் வருட இறுதியில் சொத்துக்களைக் காப்பறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். 2020 ஆம் ஆண்டில் மாநாட்டு மண்டபம் மற்றும் கேட்போர் கூடத்தை வாடகைக்கு விட்டதன் மூலம் ரூபா. 865,000.00 வருமானமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

இதற்கும் மேலால் சபையின் இடத்தை விடுப்புக் கொடுப்பனவுச் சான்றிதழின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அதன் பொருட்டுத் தேவையான அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உள்ளக நவீனப் படுத்தற் செயற்பாடுகள் நடைபெற்று வருவதால் தேவைக்கேற்ப கட்டிடத்தில் ஏற்படும் பராமரிப்புச் செயற்பாடுகளை நிறைவு செய்தல். புதுப்பித்தமைத்தல் செயற்பாடுகளின் போது அகற்றப்படும் பொருட்களை கேள்விப் பத்திரங்களை வரவழைத்து ஏலம் விடுதல், தேவைக்கேற்ப குழுக்களைக் கூட்டுதலும் புதிப்பித்தமைத்தலுக்குத் தேவையான இடங்களில் இருந்து பொருட்களை அகற்றி புதிப்பித்தமைத்தல் வேலைக்கு இட வசதிகளைச் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் சபையின் புதிய கட்டிடத்தை தயாரிப்பதற்கான திட்டமிடுதல் மற்றும் விலைப் பட்டியல் தயாரித்தல் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் மூலம் வரைபடத்தைப் பெற்றுக்கொள்ளுதல் புதுப்பித்தமைக்கப்பட்ட பகுதிக்குத் தேவையான மரத் தளபாடங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விலைப் பட்டியல் தயாரித்தல் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நிதிப்பிரிவு

2020 ஆம் ஆண்டிற்குரிய வரவுசெலவு ஏட்டை கல்வி அமைச்சிற்கு சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாதாந்தம் தயாரிக்கப்படும் நிதி முன் அறிக்கை, வரவுசெலவு விபரங்களை உள்ளடக்கிய விபரங்கள் அமைச்சின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. திறைசேரியில் இருந்து கிடைக்கவேண்டிய பணத்தை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ளும் பொருட்டு பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கிய நிதி முன் அறிக்கையை கல்வி அமைச்சிற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் சபையின் கொடுக்கல் வாங்கல், காசுப்புத்தகம் என்பன கணனிமயப்படுத்தப் பட்டுள்ளதுடன் மாதாந்த அறிக்கை மற்றும் இறுதிக் கணக்கு அறிக்கையைத் தயாரிப்பதில் இலகுதன்மையை ஏற்படுத்துவதற்காக பகுப்பாய்வு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. திறைசேரியில் இருந்து மீண்டுவரும் செலவினத்திற்காக பெற்றுக்கொண்ட பணம் மற்றும் சபையினால் உழைக்கப்பட்ட பணமும் வரவுசெலவுத் திட்டத்திற்கு அமைவாக கொடுப்பனவு செய்வதற்காக உபயோகிக்கப்பட்டதுடன், அரசாங்க கணக்காய்வுப் பிரிவில் இருந்து கிடைத்த கணக்காய்வு தொடர்பான வினாக்களுக்கு விடையளித்தல், சகல வங்கி கணக்குகளுடனும் தொடர்புடைய வரவு செலவுக் கணக்குகள் மற்றும் கணக்குப் புத்தகத்தை மாதாந்தம் தற்காலப்படுத்தி முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊழியர் சம்பளம், மேலதிக, பிரயாண மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் குறிப்பிட்ட தினங்களில் மேற்கொள்ளப்பட்டது. மீள்வரும் செலவிற்காக திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டிய பணம் நேரகாலத்தில் சரியாகக் கிடைக்காத சந்தர்ப்பங்களில் சபையினால் உழைக்கப்பட்ட பணம் வரவு செலவு வரையறைகளுக்கு உட்பட்டு கொடுப்பனவுகளின் பொருட்டு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

வரவு செலவு தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய நிதி மதிப்பீட்டுக்கு முன்னதான அறிக்கையை ஒழுங்கு செய்து, அமைச்சின் செயலாளரின் ஊடாக அரசாங்க வியாபார திணைக்களத்திற்கு மாதந்தோறும் சமர்ப்பித்து திறைசேரியில் இருந்து கிடைக்கவேண்டிய பணத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சபைக்குக் கிடைக்கும் ஏனைய வருமானங்களைச் சரியான முறையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல், மாதாந்த கணக்கு அறிக்கைகளைச் சரியான முறையில் தயாரித்து குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பித்து கல்வி அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலால் வரவு செலவு காசுப் புத்தகம் கணனிமயப்படுத்தப் படுவதுடன் அந்த விபரங்களின் அடிப்படையில் வங்கிக்கணக்கிணக்கக் கூற்று அறிக்கை மற்றும் இறுதிக் கணக்குகள் இற்றைப்படுத்தப்படுகின்றன.

இந்த வருடத்திற்குரிய மாதாந்த சம்பள அறிக்கைகளை தயாரித்தல், ஊழியர் சேம இலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், மற்றும் சட்டபூர்வமான குறைத்தலுக்கான தவணைக் கட்டணங்களை செலுத்தும் செயற்பாடுகள், தேய்மான ஏடுகளைத் தயாரித்தல், கடன் ஏடுகளைத் தற்காலப்படுத்துதல், 2018 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கறிக்கைக்கு பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல், 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கறிக்கையின் மாதிரிப் பிரதியைத் தயாரித்தல், தேவையான சம்பள விபரங்கள், பிணை வைப்பு மற்றும் ஏனைய தகவல்களை வழங்குதல், ஊழியர் சேம இலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2019 ஆம் அரை ஆண்டிற்கான அறிக்கைகளைத் தயாரித்து இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பிவைக்கும் செயற்பாடுகள் இதன் கீழ் செய்து முடிக்கப்பட்டன. இதற்கும் மேலால் சபையின் தேவைக்கு ஏற்ப எழுதுகருவிகளை வழங்குதல், விற்பனைக் கூடத்திற்குத் தேவையான பொருட்களை வழங்குதல், நூல் மட்டைகட்டும் கூடத்திற்கு தேவையான உபகரணங்களையும் இரசாயனப் பொருட்களையும் வழங்குதலுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முற்கொடுத்தல் செயற்பாடுகள்

முற்கொடுத்தற் செயற்பாடுகளின் கீழ் அலுவலக உபகரணக் கொள்வனவு செய்வதன் பொருட்டு ரூபா. 1,267,750.00 ம், தேசிய நூலகத்திற்கான நூற்கொள்வனவின் பொருட்டு ரூபா. 524,283.00ம் கணனி மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதன் பொருட்டு ரூபா.805,500.00 ம், கிராமிய நூலக அபிவிருத்தி செயற்திட்டத்தின் பொருட்டு ரூபா. 527,754.00 ம் 2020 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.

உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சபையின் நிதிப்பிரிவினால் நடைமுறைப்படுப்பப்பட்டு வரும் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி தொடர்புடைய நாளாந்த வரவு ஏடு, வரவு இடாப்பு பற்றுச்சீட்டுக்கள் மற்றும் வங்கி வைப்புக்களைப் பரிசீலித்தல், கொடுப்பனவு வவுச்சர் மற்றும் கொடுப்பனவு செய்யும் காசுப்புத்தகம் என்பனவற்றைப் பரிசீலித்தல், முற்பணக் கொடுப்பனவு மற்றும் மீளச் செலுத்துதலைப் பரிசீலித்தல். சம்பளக் கழிப்புகளின் கீழ் இடர்கடன் கொடுப்பனவு தொடர்பான ஏடுகளைப் பரிசீலித்தல், வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் செம்மையைப் பரிசீலித்தல், சபை ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பான கோவைகள் மற்றும் சம்பள கோவை என்பன பரிசீலிக்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சபையின் நிதிப்பிரிவால் நடைமுறைப் படுத்திச் செல்லப்படும் மக்கள் வங்கி நகரசபைக் கிளை, மற்றும் இலங்கை வங்கிக்குரிய 2020 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜுலை மாதம் வரையிலான நாளாந்த வரவு ஏடு, வரவுக் காசுப்புத்தகம், பற்றுச் சீட்டுக்கள் செம்மை பார்க்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு விசாரணை 01 வழங்கப்பட்டுள்ளது. மக்கள் வங்கி நகரசபைக் கிளை, மற்றும் இலங்கை வங்கிக்குரிய 2020 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜுலை மாதம் வரையிலான கொடுப்பனவு பற்றுச்சீட்டுக்கள் மற்றும் கொடுப்பனவுக்கான காசுப் புத்தகம் செம்மை பார்க்கப்பட்டு உள்ளகக் கணக்காய்வு விசாரணை 01 வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல அரச கணக்காய்வுப் பிரிவின் 05 கணக்காய்வு விசாரணைகளுக்கும், கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 01 சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான பதில் அறிக்கையை சமர்ப்பிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 02 ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பொழுதும் , நடைபெற்ற **COVID**-19 தொற்றுக் காரணமாக நிச்சயித்திருந்த கூட்ட எண்ணிக்கையை ஒழுங்குபடுத்தமுடியாமல் போயுள்ளது.

டபிள்யு. சுனில்
பணிப்பாளர் நாயகம்

பேராசிரியர் நந்த தர்மரத்ன
தலைவர்

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபை
இல.14,
சுதந்திர வழி
கொழும்பு 07

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

(கல்வி அமைச்சு)

நிதி அறிக்கை – 2020

2020.12. 31 ஆம் திகதியில் இருந்தவாறான நிதி நிலை அறிக்கை

		31.12.2020 (ரூ.)	31.12.2019 (ரூ.)
சொத்துக்கள்	குறிப்பு		
நடப்புச் சொத்துக்கள்			
காசும் காசுச் சமானங்களும்	1	13,818,978.00	10,766,828.00
பெற்றுக்கொள்ள வேண்டியவை	2	14,853,670.00	14,442,008.00
தொக்குகள்	3	16,445,512.00	16,624,477.00
முற் கொடுப்பனவுகள்	4	1,734,355.00	854,835.00
வைப்புக்கள்	5	385,716.00	361,942.00
		47,238,231.00	**43,050,090.00**
நடப்புச் சொத்துக்கள் அல்லாதவை			
உட்கட்டமைப்பு,இயந்திரங்களும்	6	51,493,522.00	4,144,090.00
உபகரணங்களும்		106,158,477.00	108,880,489.00
காணியும் கட்டிடமும்	7	41,237,807.00	45,274,294.00
ஏனைய நடப்புச் சொத்துக்கள் அல்லாதவை	8	**198,889,806.00**	**208,298,873.00**
மொத்தச் சொத்துக்கள்		**246,128,037.00**	**251,348,963.00**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
செலுத்த வேண்டியவை	9	1,603,960.00	4,724,284.00
திரண்ட செலவுகள்	10	5,563,126.00	9,581,712.00
ஊழியர் சலுகைகள	11	340,716.00	314,942.00
ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள	12	1,521,852.00	754,612.00
		9,029,654.00	**15,375,550.00**
நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை			
பணிக்காலக் கொடைக்கான ஒதுக்கம்		45,578,972.00	38,975,663.00
மொத்தப் பொறுப்புக்கள்		**54,608,626.00**	**54,351,213.00**
தேறிய சொத்துக்கள்		**191,519,411.00**	**196,997,750.00**
தேறிய சொத்துக்கள் / உரிமங்கள்			
வேறு வழிகளில் கிடைத்த கொடைகள்	13	7,030.00	7,030.00
ஒதுக்கங்கள்	14	3,138,634.00	959,147.00
திரண்ட வருமானம்	15	188,373,747.00	196,031,573.00
மொத்த தேறிய சொத்துக்கள் / உரிமங்கள்		**191,519,411.00**	**196,997,750.00**

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கியல் நியமங்களின் தேவைக்கு அமைவாக தயாரிக்கப்பட்டதாகும்

பணிப்பாளர் (நிதி மற்றும் நிர்வாகம்)

இந் நிதி அறிக்கையை தயாரித்தல் மறறும் சமர்ப்பித்தல் தொடர்பிலான சகல விடயங்களுக்கும் சபையின் பணிபப்பாளர் சபை பொறுப்பாவதுடன் பணிப்பாளர் சபையின் பொருட்டு பின்வருவோர் ஒப்பமிட்டுள்ளனர்.

---	---
பணிப்பாளர் நாயகம்	தலைவர்
தே. நூ. ஆ. சே. ச	தே. நூ. ஆ. சே. ச

2020 டிசம்பர் 31ம் திகதி நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டு அறிக்கை

	குறிப்பு	31.12.2020 (ரூ.)	31.12.2019 (ரூ.)
வருமானம்			
புத்தகசாலையின் விற்பனை கணக்கு	16	804,042.00	2,755,085.00
கேட்போர் கூட வாடகை		828,000.00	561,045.00
வாடகைக் கட்டணம்	17	2,310,513.00	3,006,065.00
வட்டி வருமானங்கள்	18	502,457.00	557,543.00
வெளியீடுகளுக்கான சந்தாப் பணம்	19	440,408.00	916,487.00
ஏனைய வருமானங்கள்	20	891,490.00	1,772,227.00
நிருவாகச் செலவிற்கான அரச கொடை		144,300,000.00	138,700,000.00
தொடர்ச்சியான இயற்கை செலவீனங்களாக மூலதனம்		-	2,162,277.00
ஒத்திவைக்கப்பட்ட வருமானம் – வெளிநாட்டு மானியங்கள் / உதவிகள்		153,560.00	-
மொத்த வருமானம		**150,230,470.00**	**150,430,729.00**
செலவுகள்			
நூலக சேவைச் செலவுகள்	21	7,322,457.00	13,286,101.00
நிருவாக மற்றும் தாபனச் செலவுகள்	22	153,958,393.00	148,584,176.00
நிதிச் செலவுகள்	23	20,410.00	33,112.00
மொத்தச் செலவுகள்		**161,301,260.00**	**161,903,389.00**
வருடத்திற்கான தேறிய மேலதிகம் / (குறைவு)		**(11,070,790.00)**	**(11,472,678.00)**
பிற வருமானங்கள்			
PPE விற்பனையினால் ஏற்பட்ட நட்டம்/ இலாபம்		(887,251.00)	14,235.00
PPE அகற்றலில் ஏற்பட்ட இலாபம் / நட்டம்		(5,661.00)	(6,657.00)
வருடத்திற்கான தேறிய மேலதிகம் / (குறைவு)		**(11,963,702.00)**	**(11,465,100.00)**

2020.12.31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமங்களில் ஏற்பட்ட மாற்றம் தொடர்பான அறிக்கை

	சபையின் நிதியம்	மூலதனச் செவிற்கான அரச கொடை	மூலதனச் செலவிற்காக ஏனைய கெ – ாடைகள்
2018.12.31ம் திகதிய மீதி	194,486	2,882	**7**
முன்னைய வருடத்திற்கான செம்மையாக்கம்	-	-	-
2018.12.31ம் திகதி செம்மையாக்கப்பட்ட மீதி	**194,486**	**2,882**	7
நடப்பு வருடத்திற்கான செம்மையாக்கம்	-	-	-
தேறிய மேலதிகம் / (குறைவு)	(11,465)	-	-
மூலதனத்திற்கான கொடை	-	13,250	-
மூலதனச் சொத்துக் கொள்வனவு	13,010	(13,010)	-
தொடர்ச்சியான இயற்கை செலவீனங்களாக மூலதனம்	-	(2,162)	
	196,031	960	7
2019 டிசம்பர் 31 திகதிய மீதி	80	-	-
முன்னைய வருடத்திற்கான செம்மையாக்கம்			
	196,111	**960**	**7**
2019 டிசம்பர்.31 திகதி செம்மையாக்க மீதி.			
தேறிய மேலதிகம்	(11,964)	-	-
மூலதனத்திற்கான கொடை	-	6,405	-
மூலதனச் சொத்துக் கொள்வனவு	4,226	(4,226)	-
2020.12.31 திகதி மீதி	**188,373**	**3,139**	**7**

2020.12.31ம் திகதி நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை

		31-12-2020 (ரூ.)
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளினாலன காசுப் பாய்ச்சல		
தேறிய மேலதிகம் / (குறைவு)		(11,963,702.00)
செம்மையாக்கங்கள்		
- தேய்மானம்	12,787,062.00	
	-	
சொத்துக்கள் இயந்திம் மற்றும் தொகுதிகளின் இலாபம் / (நட்டம்)	12,787,062.00	
ஓய்வுகால சேவைக்கால கொடுப்பனவுக்கான ஒதுக்கம்	892,912.00	
	7,383,974.00	
		21,063,948.00
மூலதன மாற்றத்திற்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபங்கள்		9,100,246.00
இருப்புக்களில் (அதிகரிப்பு) / வீழ்ச்சி	178,965.00	
பெறவேண்டியனவற்றில் (அதிகரிப்பு) /வீழ்ச்சி	(411,662.00)	
முற்பணக் கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு) /வீழ்ச்சி	(879,520.00)	
வைப்புக்களில் (அதிகரிப்பு) / வீழ்ச்சி	(23,774.00)	
செலுத்த வேண்டியவற்றில் அதிகரிப்பு / (வீழ்ச்சி)	(3,030,824.00)	
திரண்ட செலவுகளில் அதிகரிப்பு / (வீழ்ச்சி)	(4,018,587.00)	
ஊழியர் நலன்களில் அதிகரிப்பு) / (வீழ்ச்சி)	25,774.00	
பிற நடைமுறைப் பொறுப்புக்களில் அதிகரிப்பு / (வீழ்ச்சி)	767,240.00	
		(7,392,388.00)
செயற்பாடுகளினாலான காசுப் பிறப்பாக்கம்		**1,707,858.00**
ஓய்வுகால பணிக்கொடை – செலுத்தப்பட்டது		(780,665.00)
செயற்பாட்டு நடவடிக்கைகளால் கிடைத்த தேறிய நிதிப்பாய்ச்சல்		**927,193.00**
முதலீட்டுச் செயற்பாடுகளினாலான காசுப் பாசச்ல்		
மூலதனச் செலவினத்திற்கான அரச கொடை	6,405,000.00	
ஆண்டிற்கான முதலீடுகள்	-	
சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் கொள்வனவு	(4,315,013.00)	
சொத்து, தாவரங்கள், உபகரணங்களை அகற்றுதலினால் பெற்றுக்கொண்ட பணம	34,970.00	
முதலீட்டுச் செயற்பாட்டினாலான தேறிய நிதிப்பாய்ச்சல்		2,124,957.00
நிதியிடற் செயறபாட்டுகளினாலான நிதிப்பாய்ச்சல்		
நீண்ட காலக் கடன்பாடுகளுக்கான மீள் கொடுப்பனவு	-	
நிதியிடற் செயற்பாட்டுகளினாலான நிதிப்பாய்ச்சல்		-
காசு மற்றும் காசுச்சமானங்களிலான தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி)		3,052,150.00
ஆண்டுத் தொடக்கத்தில் காசு மற்றும் வங்கி மீதி		10,766,828.00
வருட இறுதியில் காசு மற்றும் காசுச்சமானங்கள்		**13,818,978.00**
31.12.2020 ஆம் திகதி வங்கியில் இருந்த பணம்		**13,818,978.00**

2020 டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்

1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இந் நிறுவனமானது 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பிரதான நோக்கம் நிறுவனத்தினதும் நூலக சேவை அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்கும் உதவி வழங்குவதும், இலங்கைத் தேசிய நூலகத்தை வழிநடத்திச் செல்தல், பொது நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்களின் உயர்வு மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்குதல், வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், நூல் அபிவிருத்தி, ஆவணவாக்கல் செயற்பாடுகளில் உதவுதல் போன்றனவாகும்.

இந் நிறுவனம் இல.14, சுதந்திர வழி, கொழும்பு 07 என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

01. பொது

01.01. கணக்கிடுதலின் அடிப்படை

a) நிதி நிலை அறிக்கை, நிதிச் செயற்பாட்டு அறிக்கை, உரிம மாற்றங்கள் பற்றிய அறிக்கை, நிதிப்பாய்ச்சல் அறிக்கை, கணக்கியல் கொள்கைகள் பற்றிய அறிக்கை மற்றும் சபைக் கணக்குக ளுக்கான குறிப்புக்கள் என்பன இலங்கைப் பட்டையக்கணக்காளர் நிறுவனத் தினால் விதிக்கப் பட்டுள்ள இலங்கைப் பொதுத்துறைக் கணக்கியல் நியமங்களுக்கு (SLPSAS) அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

b) சபையின் நிதி அறிக்கையானது வரலாற்றுக் கிரய பாரம்பரியத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது

c) நிதி அறிக்கையைப் பாதிக்கும் பணவீக்கம் தொடர்பாக எவ்வித செம்மையாக்கல் அறிக்கை களும் தயாரிக்கப்படவில்லை.

d) சபையின் நிதி அறிக்கையானது இலங்கை ரூபாய்களில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அண்மித்த ரூபாய்களில் தரப்பட்டுள்ளது. .

e) சபையின் நிதி அறிக்கையானது 1998 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சட்டத்துக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளது.

f) சபையின் நிதி அறிக்கையானது தொடர்ந்து இயங்கும் கருத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

01.02 ஒப்பீட்டளவில் தகவல்கள்

கணக்கியல் கொள்கைகள் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டுக்கான கணக்கை நிச்சயப்படு-த்தத் தேவையான இடங்களில் முன்னைய ஆண்டுக்கான இலக்கங்களும் சொற் பதங்களும் மாற்றியமை-க்கப்பட்டுள்ளன.

01.03 மாற்றம் ஏதுமின்றி சமர்பித்தல்

2020 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கையானது விடயங்கள் பிரிப்பு மற்றும் சமர்ப்பித்தலில் எவ்வித மாற்றங்களும் இன்றித் தயாரிக்கப்பட்டுள்ளது.

02. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்

நிதி நிலைமை அறிக்கையில் நடமாடும் சொத்துக்கள் எனக் குறிப்பிடப்படுவது சாதாரண செயற்பாட்டு முறைமையின் கீழ் ஒரு வருட காலத்தினுள் அல்லது நிதி நிலை அறிக்கைத் திகதியில் இருந்து ஒரு வருடகாலத்தினுள் காசு, காசுக்குச் சமானமானவை என எதிர்பார்க்கப்படுபவையாகும்.

02.01 ஆதனம், பொறித்தொகுதி மறறும் உபகரணம் பெறுமானத் தேய்வு

02.01.01 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பனவற்றின் பெறுமதி திரண்ட பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பெறுமதியைக் குறிக்கும். ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணத்தின் பெறுமதி யானது அவற்றின் கொள்வனவு அல்லது கட்டுமானச் செலவு அத்துடன் அச்சொத்தை தற்போதைய நிலைக்குக் கொண்டு வருவதற்காகாகச் செய்த சகல செலவுகளையும் உள்ளடக்கும்.

வழங்கப்படும் சேவையின் பரிமாணத்தை அதிகரிக்கும் நோக்குடன் சொத்துக்களைப் பெறுதல், புதுப்பித்தமைத்தல் மற்றும் மேலும் அவை வழங்கும் சேவையின் அளவை அபிவிருத்தி செய்வதற்காகச் செய்யப்படும் செலவுகளும் மூலதனச் செலவாகக் கருதப்படும்.

02.01.02 தேய்மானம்

சொத்துக்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ளவாறு குறைந்து வரும் முறையைக் கையாண்டு பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டுள்ளது.

கட்டிடங்கள்	2 1/2 %
மோட்டார் வாகனங்கள்	10 %
அலுவலக உபகரணங்களும் தளபாடங்களும்	10 %
கணனி மறறும் கணனி உபகரணங்கள்	10 %
நூலக உபகரணங்கள்	10 %
நூல் மட்டைகட்டும் உபகரணங்கள்	10 %
நாட்டார் இலக்கிய நிலைய உபகரணங்கள்	10%
இயந்திர சாதனங்களும் இயந்திரங்களும்	10 %
நூலிருப்பு - தேசிய நூலகம்	10 %
எண்மய சேகரிப்பு – தேசிய நூலகம்	10 %
Kiyawamu.lk	10%

01.01.2014 இலிருந்து நிலையான சொத்துக்களில் அவற்றின் எஞ்சியுள்ள பாவனைக் காலத்திற்கு பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டுள்ளதுடன் கொள்ளவனவு செய்யப்பட்ட அல்லது பெற்றுக் கொண்ட வருடத்தில் அவற்றிற்குப் பெறுமானத் தேய்வு ஒதுக்கப்படவில்லை. அவை அகற்றப்படும் ஆண்டில் முழு வருடத்திற்குமான பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டுள்ளது. 01.01.2014 ஆம் திகதியின்பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பெற்றுக் கொள்ளப்பட்ட தேசிய நூலக நூலிருப்புத் தவிர்ந்த சொத்துக்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்டுள்ளது. 01.01.2014 பின்னர் தேசிய நூலகத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட நூலிருப்புக்கு அவை கொள்ளவனவு செய்யப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட மாதத்தில் இருந்து பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டுள்ளது.

02.02 காணி கட்டிடத்திற்கான பெறுமதி மதிப்பீடு

தேசிய நூலகம் அமைந்துள்ள காணியும் கட்டிடமும் தனியார் மதிபபீட்டாளராக சொக்மன் அன்ட் சமரவிக்கிரம கம்பனியினால் 1995 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 16ஆம் திகதி கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு மதிபபிடப்பட்டுள்ளது.

காணி (318 பேர்ச் ஒரு பேர்ச் ரூபா 8,000,000.00 வீதம்)	ரூ. 254,400,000.00
கட்டிடம் (பிரதான கட்டிடம்) வாகன தரிப்பிடம், பாதுகாப்பு அறை, நீர்தாங்கி, குளிரூட்டி மறறும் மின்சாரக் கட்டிடம்)	ரூ. 84,807,400.00
	ரூ. 339,207,400.00

02.03 தொக்குகள் (இருப்பு)

தொக்குகள் கிரயத்தில் குறீப்பிடப்பட்டுள்ளது. அன்பளிப்புக்கள் மதிப்பிடப்பட்ட செலவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது

02.04 பெற வேண்டியவை

பெற வேண்டியவற்றில் தேறும் என மதிப்பிடப்பட்ட தொகையே பெற வேண்டியவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

02.05. நிலையான சொத்துக்களின் உறுதிப்படுத்தல்

2014.12.31 ஆம் திகதி நிலையான சொத்துக்களைக் கணக்கிடும்போது அலுவலகத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், நூலக உபகரணங்கள், நூல் மட்டை கட்டும் உபகரணங்கள், நாட்டார் இலக்கிய மத்திய நிலைய உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்றவற்றின் 31.12.2011 மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்க அமைவாக அவற்றின் கொள்வனவுப் பெறுமதி கழிக்கப்பட்டு அவை அகற்றப்படும் போது உள்ள பெறுமதியைக் கூட்டுவதன் மூலம் கணிக்கப்பட்டுள்ளது. பௌதீகச் சொத்துக்களான ரூபா. 96,512.16 பெறுமதியான நூலக உபகரணங்கள் போன்றன 2018.12.31 அன்று பௌதீக ரீதியில் இனங்காணப்படாத சொத்துக்களாக இனங்காணப்பட்டுள்ளன. அவை பௌதீக ரீதியில் காணப்படாமையால் அவற்றிற்கான பெறுமானத் தேய்வு கணிக்கப்படவில்லை.

02.06 மூலதன கொடைகளை மாற்ற முடியா சொத்தாக்குதல்

நடப்பு வருடத்தில் மூலதனக் கொடுப்பனவிற்கான சகல கொடைகளும் சேர்ந்த நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

02.07. ஏனைய அமைப்புக்களில் இருந்து பெறப்பட்ட மூலதனக் கொடைகள்

நடப்பு வருடத்தில் அகற்றப்படவேண்டும் என இனங்காணப்பட்ட ரூபா 2,640,900/- பெறுமதியான நிலையான சொத்துக்கள் நடப்பாண்டில் அகற்றப்பட்டன.

03. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

03.01 பொறுப்புக்கள்

